# மோதல் முறைக்கு பதிலாக சமரசம் மூலம் தீர்வு காண்பதற்கு ஜனதிபதி திடசங்கற்பம்!

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 மாசி: 12 றஜபு பிறை: 27 இதழ்: 11

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-02-1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கொழும்பு)

மோதல் முறைக்குப் பதிலாக சமரசப் போக்கு மூலம் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க தாம் திடசங்கற்பம் கொண்டுள்ளதாக ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாஸா மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கு ழு ஜனதிபதியை நே ற் று முன்தினம் இரவு கொழும்பு சுசரித மாவத்தையிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து பேச்சு வார்த்தைகள் நடத்திய போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவரான மாத்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மார்ச் மாதம்முதல் பூரணமாக இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிராந்திய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் நிலவும் ஊழியர் பற்றாக் குறையினால் புதிய வியாபார நடவடிக்கைகளை கூட்டுத்தாபனம் இதுவரை ஆரம்பிக்கவில்லை. ஊழியர்கள் இம்மாத இறுதியில் நியமனம் செய்யப்பட்டதும் சகல வர்த்தகங்களும் நடைபெறுமென யாழ்ப்

(8ம் பக்கம் பார்க்க)

# புலிகள் சிறிலங்கா ராணுவம்

# மோதல் ஏற்படமாட்டாது!

## ஜனதிபதி உறுதியளித்ததாக மாத்தயா பீ. பீ.ஹிக்கு பேட்டி

(லண்டன்)

**இலங்கை இராணுவப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல்கள் ஏற்படும் நிலைக்கு அனுமதிக்க மாட்டோம் என்று இலங்கை ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாஸா தங்களிடம் உறுதியான வாக்குறுதி அளித்திருப்பதாக புலிப்படையின் மக்கள் முன்னணி அரசியல் அணியின் தலைவர் மாத்தயா பீ. பீ. ஹிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.**

அவரது பேட்டி வருமாறு.

நேற்றைய தினம் ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவை சந்தித்து கிட்டத்தட்ட நான்கு மணிநேரம் பேசினோம்.

தமிழ் ஈழத்தில் நிலவும் பாதுகாப்பு நிலைமைகள் பற்றியும் தமிழ் முஸ்லிம் மக்களின் சந்தேகங்கள்; அச்சங்கள் பற்றியும் ஜனதிபதியிடம் எடுத்து விளக்கினோம்.

இந்திய ராணுவம் வெளியேறியதும் சிறிலங்கா ராணுவம் தமிழ் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற பீதி எமது மக்கள் மத்தியில் பரவலாகத்தோன்றியிருப்பதை எடுத்துக் கூறினோம்.

பேச்சுவார்த்தை மூலமே

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் உடன்பாடு

(லண்டன்)

இலங்கையிலிருந்து அமைதி காக்கும் படை முற்றுக வெளியேறியபின்னர் மோதல்கள் ஏற்படாமலிருக்க இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் ஒரு உடன்பாட்டை எட்டியுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர்களிலொருவரான மாத்தயா எனப்படும் திரு கோபாலசாமிமகேந்திரராஜா இலங்கை ஜனதிபதி திரு ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்த போது இந்த உடன்பாடு ஏற்பட்டது.

சென்ற ஆண்டு மே மாதம் சமரசப் பேச்சுவார்த்தையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## மண்டபம் முகாம் அகதிகள் இடமாற்றம்

(சென்னை)

தற்போது மண்டபம் முகாமில் தங்கியிருக்கும் சில இலங்கைத் தமிழ் அகதிகள் திருச்சியிலுள்ள கோட்டப்பட்டி முகாமுக்கு மாற்றப்படவுள்ளனர்.

இத்தகவலை திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீனதயாள் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில், தற்போது 100 வீடுகள் கோட்டப்பட்டி முகாமில் ஒரு லட்சம் ரூபா செலவில் திருத்தப்பட்டிருப்பதாகவும், மேலும் 1000 பேர் குடியமர்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி உ. அ. அ. பிரிவில் ஆசிரியர் பயிலுநர் தெரிவானோர் விபரம்:

(எமது நிருபர் ஸ்சி)

யாழ்ப்பாணம் கோட்டக் கல்வி நிலையத்தில் ஆசிரியர் பயிலுநர் தெரிவுக்கான நல் லூர் சாவகச்சேரி யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பட்டியல் வெளியிடப்பட்டிருந்தன

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு பட்டியலைப் பார்க்க சென்றவர்கள் நேற்று ஏமாற்றமடைந்தனர்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானோர் விபரம் வருமாறு:

ஆரம்பக் கல்வி;

307 திருமதி ஐ. கலாஜோதி நுணுவில் மேற்கு, 331 பி. நகுலேஸ்வரி கல்வயல், 413, த பரமேஸ்வரி கல்வயல், 1187 அ. யோகரஞ்சிதம் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி, 260 கே. கலாசோதி சரசாலை தெற்கு, 236 கே. இராசமணி கெற்பலி, 1849 சி. திலகவதி நாவற்காடு வரணி, 1133 வ. சரஸ்வதி உசன், 2259 பொ. சிம்பாலினி மீசாலை வடக்கு, 108 கே. காந்தரூபி தாவளை இயற்றாலை, 636 மு. சோதீஸ்வரி கைதடி தெற்கு, 2032 சி.

(8ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் நெடுமாறன்

(மட்டுவில்)

தமிழ் நாட்டு அரசியல் பிரமுகர் திரு. நெடுமாறன் சாவகச்சேரிக்கு விஜயம் செய்தார். அவரை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் வரவேற்று உபசரித்தனர்.

## மக்கள் வங்கி தமிழில் தொடர்பு

(வட்டுக்கோட்டை)

மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயம் தற்போது வடபகுதியில் உள்ள கிளைகளுடன் தமிழில் தொடர்பு கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகள் கொழும்பிலுள்ள தலைமைக் காரியால

(8ம் பக்கம் பார்க்க)

## கடலில் மூழ்கி கர்ப்பிணிப்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆறு மாதக் கர்ப்பிணிப் பெண்ணொருவர் நேற்று கடலில் மூழ்கியதால் மரணமானர்.

பலாலியைச்சேர்ந்த அருள் மேரி ஜோசப்பிரஞ அந்தோனிப்பிள்ளை (வயது 20) என்ற இளம் பெண்ணே மரணமான

(8ம் பக்கம் பார்க்க)

## பக்தர்கள் தவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் சென்ற ஆயிரக்கணக்கான பக்தர்கள் கேரதீவு இறங்கு துறையில் பஸ்வண்டிகள் இல்லாது நீண்டநேரம் தவம் கிடந்ததாக அறியப்படுகிறது. வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு போதிய பஸ் இல்லாமையால் இக்கதி பயணிகளுக்கு ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (12)

## திருக்கேதீஸ்வரம் சென்ற இரு பஸ்கள் விபத்துக்குள்ளாகி மாணவர்கள் உட்பட பலர் காயம்!

(யாழ்ப்பாணம்)

தண்ணீரூற்று பகுதியிலிருந்து திருக்கேதீஸ்வரம் சென்ற மினிபஸ் ஒன்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் வண்டியுடன் மோதுண்டதில் பலர் படுகாயமடைந்தனர். மினிபஸ் பலத்த சேதத்திற்குள்ளானது.

தண்ணீரூற்றிலிருந்து பிரயாணிகளுடன் புறப்பட்ட மினிபஸ் நெடுங்கேணிச் சந்தியில் முல்லைத்தீவிலிருந்து தண்ணீரூற்று நோக்கி வந்த பஸ் வண்டியுடன் எதிர் எதிராக மோதுண்டதில் பலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியிலும், யாழ். ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

காயமடைந்தவர்களில் குழுழமுனையைச் சேர்ந்த வல்லிபுரம் நேசரட்னம் (வயது 27), வேலுப்பிள்ளை சத்தியமூர்த்தி (வயது 55) ஆகிய இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் திருகேதீஸ்வரம் சென்ற வேறொரு தனியார் பஸ்வண்டி ஒன்று தடம்புரண்டு ஆசிரியர் உட்பட 15க்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## 6,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வன்செயல்கள் காரணமாக குடும்பத்தலைவர்களையோ நெருங்கிய உறவினர்களையோ இழந்தவர்களும், வன்செயல்கள் காரணமாக அங்கவீனம் அடைந்தவர்களுக்குமென வழங்கப்படும் நிவாரணத்தைப்பெற இதுவரை 6000 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களது விண்ணப்பங்களில் ஆயிரத்தி அறுநூறு பேரது விண்ணப்பங்கள் நிவாரணம் வழங்க சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் பெரும் பாலானவை விதவைகளது விண்ணப்பங்களாகும், (12)

## வீரி வினைபரும்

### தேவை

சீமெந்து இறக்கி ஏற்ற கூலியாள் தேவை. தொடர்பு; சிவலிங்கம் மோட்டோர்ஸ், 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி 3523)

### விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு மீன்கள் கோல்ட் ஃபிஷ். ஏஞ்சல், குரு, காப்ஸ், பாப்ஸ் (Barbs) போன்ற இனங்கள் விற்பனைக்குண்டு. இரத்தின வாசா, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு. [கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில்.] (சி 3522)

றலி, ஏசியா, சிங்கர், லுமாலா சையிக்கிள்கள் சாளி மோட்டார் சையிக்கிள் மினி பஸ் ஏயர் கூலர் லேலன் டனமோ 24 V ஸ்ராட்டர், ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 180 நாவலர் வீதி, சோமஸ்ரான் கருப், பிறவுண் ரோட், சந்தி, யாழ்ப்பாணம். (சி 3512)

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தில் சர்வோதயம் ஸ்தாபனத்திற்கு பின்பக்கமாக பத்து பரப்புகாணி உடன் விற்பனைக் உண்டு. தொடர்பு கொள்ளவும்: திருமதி நாகம்மா நாகநாதி, ஆஸ்பத்திரி வீதி, புங்குடுதீவு 2. (சி 3518)

## மாணவர்களுக்கு சமைத்த உணவே வழங்கவேண்டும்

(மட்டகளப்பு)

"மாணவர்களுக்கு மதிய உணவாக சமைத்த உணவே வழங்கவேண்டும். பிஸ்கட் வழங்குதலைத் தவிர்த்துக் கொள்க."

இவ்வாறு மட்டக்களப்பில் உள்ள பாடசாலைகள் மதிய உணவை வழங்கும் முறையை பார்வையிட வந்த கல்வி அமைச்சின் மதிய உணவு, தமிழ் விவகாரங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் வே. சபாநாயகம் கூறியுள்ளார்.

தற்போது இவர் மட்டக்களப்பில் உள்ள பல்வேறு பாடசாலைகளுக்கும் சென்று மதிய உணவு, மாணவர்களுக்கு சீராக வழங்கப்படுகின்றதா என்பதை பார்வையிட்டு வருகிறார். [பூ]

## மதிப்பாய்வு

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அங்கவீனர்கள் மனோவீனர்கள் தொடர்பான மதிப்பாய்வு கிராமசேவை அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இருபத்தைந்து கிராமசேவை அலுவலர் பிரிவிலும், கிராம சேவை அலுவலர்களினால் சமூகசேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டின் பேரில் அங்கவீனர்கள், மனோவீனர்கள் தொடர்பான மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## வடக்கிலும் கிழக்கிலும் செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள்

(யாழ்ப்பாணம்)

இதுவரை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக்கிளை கொழும்பில் மாத்திரமே இயங்கி வந்தது. தற்போது அதன் கிளைகள் வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் திருமலையிலும் நிறுவ ஏற்பாடாகியுள்ளன.

தமிழ் மக்களின் நீண்டகால இக்கோரிக்கை இப்பொழுது தான் செயலுருவில் இடம் பெற்றுள்ளன. (ம)

## புலிகள் வேண்டுகோள்

[நெல்லியடி]

நெல்லியடி. கலிகை, மந்திகை முதலான இந்தியப் படைகள் விலகிய முகாம்களுக்கு பொதுமக்கள் உட்செல்லவேண்டாமென விடுதலைப்புலிகள் சுவரொட்டிகள் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம)

## சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நாளை 25ந் திகதி ஞாயிறு காலை 'பள்ளிகொண்டான் பரந்தாமன்' என்னும் தலைப்பில் விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

வாரந்தோறும் நடைபெற்று வரும் இச்சொறபொழிவுகள் புதிய வசந்த மண்டபத்தில் நடைபெறும்

## மருந்துவகைகளை தகுந்த முறையில் பாவிக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

மருந்து வகைகளின் பாவனை எல்லா முன்னேற்றமடைந்த நாடுகளிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மருந்துவகைகள் சரியான முறையில் பாவிக்கப்படவேண்டும். விநியோகிக்க முன் ஒரு தகுந்த வைத்தியரிடம் ஆலோசனை பெறவேண்டும்.

இவ்வாறு யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்க செயலாளர் ஸ்ரீகணேசன் மருந்து விநியோகம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் என்ற பிரசுரம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது: மருந்துவகைகள் பாவிக்குமுன் எவ்விதமருந்தாலும் தகுந்த வைத்தியரிடமிருந்து வைத்திய ஆலோசனைகள்பெறவேண்டும். மருந்து விற்பனை நிலையங்கள் அனைத்தும் பதிவுபெறவேண்டும். தகுதிய பொறுப்பாளர், பயிற்சிபெற்றிருத்தல் வேண்டுமம். மருந்து வகைகள் நல்லமுறையில் களஞ்சியப்படுத்தல வேண்டும். பழுதான அல்லது காலம் கடந்த மருந்துகள் விநியோகித்தலாகாது.

## கிழக்கு மாகாண ஆலயங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆலயங்களைப் புனரமைக்க வட, கிழக்கு மாகாண அமைச்சு நிதி ஒதுக்கியுள்ளது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் ஆலயம், மண்டூர் கந்தசுவாமி கோவிலுக்கு தலா இரு லட்சம் ரூபாவும் அம்பாறை மாவட்டத்தில் சாரைதீவு,கண்ணகையம்மன் ஆலயம், காரைதீவு பாலையடி விநாயகர் ஆலயம் சித்தானைக்குட்டி ஆலயம், காரையடிப் பிள்ளையார் ஆலயம், வீரபத்திரர் ஆலயம் ஆகிய 5 கோவில்களுக்கும் இரண்டு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயங்களுக்கான கொடுப்பனவுகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன. (பூ)

## 15வது கொடிநாள் விழா

[யாழ்ப்பாணம்]

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் 15வது கொடிநாள் விழா ஏற்பாடாகியுள்ளது. தவத்திரு சுவாமி சித்பவானந்தா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில் அருள்மொழிச் செல்வர் திரு. க நாகேஸ்வரன், திரு. க. கனகராசா, ஆத்மஜோதி நா. முத்தையா போன்றோர் ஆசியுரை வழங்கவுள்ளார்கள். மார்ச் 10-ம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு இவ்விழா ஆரம்பமாகும். [ம]

## வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

காரைநகர் கொத்தணி பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 28-ம் திகதி புதன்கிழமையன்று காரைநகர் கலாநிதி ஆயாகராசா மத்திய மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

காரைநகர் கொத்தணி அதிபர் திரு. எம். திருநீலகண்ட சிவம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் 14 பாடசாலைகள் கலந்துகொள்கின்றன. (72)

* * *

(பண்டத்தரிப்பு)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வருடாந்த மெய்வல்லுநர் போட்டி அடுத்த மாதம் 6-ம் திகதி கல்லூரி அதிபரும், காங்கேசன்துறை கொத்தணி அதிபருமான திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது. (72)

* * *

(பண்டத்தரிப்பு)

காங்கேசன்துறை கொத்தணி பாடசாலைகளுகிடையிலான வருடாந்த உடற்பயிற்கிப் போட்டி அடுத்தமாதம் 2-ம் திகதியன்று காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

காரைநகர் கொத்தணி அதிபர் திரு. எம். திருநீலகண்ட சிவம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் 11 பாடசாலைகள் கலந்து கொள்கின்றன. (72)

## அடகுநகைகள் மீளளிப்பு

(திருகோணமலை)

கடந்த ஏழுவருடங்களாக மூடப்பட்டிருந்த கிண்ணியா மக்கள் வங்கி இப்போது திறக்கப்பட்டு வழமையான கருமங்களை ஆற்றிவருகிறது.

இவ் வங்கியில் நகைகளை அடகு வைத்தோர் மீட்பதற்காக முன்னர் பணம் செலுத்தியிருந்தனர்.

தற்போது ஒரு தொகுதி நகைகள் வழங்கப்பட்டு வருவதோடு ஏனையோரின் நகைகளையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (பூ)

## நஷ்டஈடு வழங்கப்பட்டது

(மானிப்பாய்)

கலவரங்களாலும், வன்செயல்களினாலும் இறந்தவர்களினதும், காயப்பட்டவர்களினதும் குடும்பங்களுக்கு யாழ். செயலகத்தில் நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டது.

83ம் ஆண்டு ஜூலை மாதத்தின் பின் நாட்டில் அடுத்தடுத்து இடம்பெற்ற சம்பவங்களினால் யாழ். மாவட்டத்தில் காயப்பட்டவர்களும், குடும்பத் தலைவரை இழந்தவர்களும் நிவாரணம் கோரி விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் ஒரு பகுதியினருக்கு காசோலை வழங்கும் வைபவம் அண்மையில் யாழ். செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் குடும்பத் தலைவரை இழந்த 169 பேர் 50,000ரூபா காசோலையையும், காயம் அடைந்தவர்களுக்கு வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையின் தன்மையைப் பொறுத்தும் நஷ்டஈடு வழங்கப்பட்டது.

## வல்வைக் கழகம் வெற்றி

(நெல்லியடி)

ஹாட்லி கல்லூரியின் 150வது வருடப் பூர்த்தியை முன்னிட்டு பருத்தித்துறை உதைபந்தாட்டலீக் நடத்திய உதைபந்தாட்ட இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

ஹாட்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும், வல்வை விளையாட்டுக் கழகமும் மோதியது. இப்போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகம் 1-0 என்ற கோல்களால் வெற்றிபெற்றது.

## புலமைப் பரிசில்

[யாழ்ப்பாணம்]

1989ஆம் கல்வி ஆண்டிற்காக குரும்பசிட்டிக் கிராமத்திலிருந்துபல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றவர்களில் சிறப்பு மாணவனுக்கான அமரர் த. இராசரத்தினம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் சபைத் தலைவர் ஆ. தம்பித்துரை தலைமையில் சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெறும்.

முல்லைத்தீவு மக்கள் வங்கி உதவி முகாமையாளர் திரு எஸ். சிவபாதம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புலமைப் பரிசில் வழங்குவார்

## கருத்தரங்கு

(யாழப்பாணம்)

யாழ். பொறியியலாளர் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'வீடமைப்பில் சிக்கனம்' என்பது பற்றிய கருத்தரங்கொன்று நாளை 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. [பூ]

## இன்று வருடாந்த பொதுக்கூட்டம்

(மானிப்பாய்)

நவாலி வை. எம். சி. ஏயின் 99-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 24-ந் திகதி பிற்பகலில் நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் அதன் தலைவர் திரு. ஜே. ஐ. தம்பிராசா தலைமை நடைபெறவுள்ளது

1891ல் ஸ்தாபிக்கப்பட்ட மேற்படி ஸ்தாபனம் 19 1ல் தனது 100-வது ஆண்டு நிறைவுவிழாவை பெருமையுடன் கொண்டாடவிருப்பது குறிப்பிடத்தக்கது. (71)

## நியமனம்

[மானிப்பாய்]

யாழ். மாவட்ட உதவி சிறுகைத்தொழில் பணிப்பாளராக திரு. ந. கனகசுந்தரம் பிள்ளை இம்மாதம் 13-ந் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்பு அதே இலாகாவில் பதவி நிலை உத்தியோகத்தராக இருந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (71)

## இவர்களுக்கு பட்டதாரிச் சம்பளம்

[யாழ்ப்பாணம்]

எண்பத்திநாலாம் ஆண்டு ஜனவரிக்கும் எண்பத்தெட்டாம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஆசிரியர் சேவையில் இருந்து பட்டதாரிப் பட்டம் பெற்றவர்களுக்கு எண்பத்தெட்டாம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பட்டதாரிச் சம்பளம் கிடைக்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணப் பிரதேச கல்வித் திணைக்கள நிதிப் பிரிவு ஆரம்பித்துள்ளது. இக்கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் இருப்பினும் விரைவில் இது நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். [12-த]

## பூநகரியில் கூலி விநியோகம்

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காணியற்றவர்களுக்கு காணி விநியோகத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இக்காணிகள் குடியிருப்பு விவசாயம் போன்ற தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட விருந்தாலும் ஜனசக்தி திட்டத்திற்கு உட்பட்டவர்களுக்கே முன்னுரிமை வழங்கப் படவுள்ளன, (56)

## தொழிற்பயிற்சி வகுப்புகள்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிதொழில்நுட்ப நிறுவனம் சர்வதேச "கெயர் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் பலவிதமான தொழிற் பயிற்சி வகுப்புக்களை நடாத்தி வருகின்றது.

மேற்படி சர்வதேச கெயர் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன்நடாத்தப்படும் மேசன், தச்சுவேலைப் பயிற்சி நெறிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சிகளைப் பெறும் மாணவர்களுக்கு விசேட படியாக ரூபா500 மாதந்தோறும் வழங்கப்படும். இரண்டரை மாதங்களுக்கு நடைபெறும் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு பயிற்சி நெறியைப் பூரணமாக முடித்துகொள்வதோடு திறமையுடன் வெளியேறுபவாகளுக்கு தொழிற் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப் படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (139)

## பிரிவுபசார வைபவம்

(யாழ்ப்பாணம்)

"ஒரு சிறந்த கிறிஸ்வனுக்குரிய குணங்களுடன் வாழ்ந்து வந்ததோடு பிரச்சனைகளோடு எமது அலுவலகத்தை தேடிவரும் ஊழியர்களை அனுதாபத்துடன் அணுகி அவர்களுடைய தேவைகளை மனம் கோணுமல் செய்து கொடுக்கும் ஆற்றல் உள்ளவர் செபமாலை. அவர் ஒரு கிறிஸ்தவராக விருந்தும் சரஸ்வதிபூசை போன்றவிழாக்களை முன்னின்று நடத்தியவர் இவரது இளைப்பாறுகைதினைக்களத்தைப்பொறுத்த மட்டில் பெருநஷ்டமாகும்."

இவ்வாறுஅஞ்சல் திணைக்கள யாழ். பிரதேச கணக்குக் கிளையில் பணியாற்றி இளைப்பாறிய திரு. எஸ். செபமாலைக்குஊழியர்களால் நடத்தப்பெற்ற பிரிவுபசார வைபவத்தில் திரு. நெல்லை க. பேரன் குறிப்பிட்டார.

இப்பிரிவுபசார வைபவத்தில் திரு. அ. சீவரத்தினம், திரு.ஏ. ஜோசப் ஆகியோரும் திரு. செமாலையைப் பாராட்டிப் பேசினார்கள். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரை விட்டு இந்தியா வெளியேறும்வரை போராட்டம் நடைபெறும் - காஷ்மீர் விடுதலை முன்னணி

(ஸ்ரீநகர்)

**காஷ்மீரை விட்டு இந்தியா வெளியேறும் வரை எமது போராட்டம் நடைபெறும் என்று காஷ்மீர் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.**

எமது மக்களின் கருத்தை மதிக்காதவரை இந்தியாவுடன் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்றும் இந்த முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரிலுள்ள செல்வாக்குமிக்க சில பிரிவினைவாத தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவதற்காக மாநில ஆளுநர் முயற்சி செய்து வருகிறார் என்ற செய்தி வெளியானதைத் தொடர்ந்தே விடுதலை முன்னணி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க தேசிய மாநாட்டுக் கட்சி பிளவுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள இக்கட்சியின் பல கிளைகள் கலைக்கப்பட்டிருக்கின்றன.

காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர்களின் சொற்படி நடக்கத் தாம் தயாராக இருப்பதாக தேசிய மாநாட்டுக் கட்சியின் மாநிலத் தலைவர் உட்பட பல முஸ்லிம் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து முன்னாள் அமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

பரூக் அப்துல்லா, காஷ்மீர் இந்தியாவுடன் இணையவேண்டுமென்பதற்கு ஆதரவானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க காஷ்மீர் மக்களின் கருத்தினையறியவாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று ஐ.நா. இராணுவ பார்வையாளர் அலுவலகத்தில் மேலும்பலர் மனுக்களை கையளித்துள்ளனர். (து)

## அக்கரைப்பற்றில் பிரஜைகள் தொண்டர் படைகள்

(அக்கரைப்பற்று)

திருகோணமலையில் இந்திய அமைதிகாக்கும் படையிடம் பயிற்சியை முடித்துக் கொண்ட 66 பிரஜைகள் தொண்டர் படையினர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழர் முஸ்லிம்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முன்னர் பொலிஸ் நிலையத்தில் நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவம் நீக்கப்பட்டு, நிலையக் கடமைகளில் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (பூ)

## கொர்பச்சேவின் சீரமைப்பு திட்டங்களுக்கு ஆதரவு கோரி கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

(மாஸ்கோ)

சோவியத் தலைவர் கொர்பச்சேவின் சீரமைப்புத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கும்படி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மாஸ்கோ வானொலி ஊடாக பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

குழப்பத்தை தூண்டி தகராறுகளை ஊக்குவிப்பவர்களை நிராகரிக்கும் படியும் இவ் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பல பகுதிகளில் மாற்றங்கள்கோரி நடாத்தப்பட்ட பேரணிகள், சோவியத் யூனியனுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் யாவும் குழப்பங்களுடன் முடிவடைந்ததாக வானொலியில் ஒலிபரப்பப்பட்ட இந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (து)

## பாலஸ்தீன சமாதான முயற்சி பி. எல். ஓ. எச்சரிக்கையை இஸ்ரேல் அலட்சியம்

(ஜெரூசலம்)

பலஸ்தீன பிரச்னை குறித்த சமாதான முயற்சிகளிலிருந்து விலகிக் கொள்ளப்போவதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் விடுத்துள்ள எச்சரிக்கையை இஸ்ரேலிய அரசாங்க பேச்சாளர் ஒருவர் அலட்சியப்படுத்தியுள்ளார்.

பி. எல். ஓ சமாதான முயற்சியில் கலந்துகொள்ளும் இஸ்ரேலின் முடிவை தாம் விரும்பவில்லை என்றும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

பாலஸ்தீனியர்களுடன் சமாதான பேச்சுக்கள் நடத்துவதற்கான நடவடிக்கைகளை இஸ்ரேல் அரசு எடுக்காவிடின் தொழிறகட்சி கூட்டணி அரசிலிருந்து விலகி விடும் என்று இஸ்ரேலின் பாதுகாப்புத் துறை அமைச்சர் எச்சரித்துள்ளார். (து)

## தென்னபிரிக்க அதிபர் ஆபிரிக்கத் தலைவர்கள் சந்திப்பு ஒத்திவைப்பு

(ஜொகனஸ்பேர்க்)

தென்னபிரிக்க ஜனாதிபதி எஸ். டபிள்யூ. கிளார்க்கிற்கும் ஆபிரிக்க தலைவர்கள் குழு ஒன்றிற்கும் இன்று நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

இந்தப் பேச்சு வார்த்தைகளுக்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தெரிவித்த கண்டனத்தைத் தொடர்ந்தே இச் சந்திப்பு ஒத்திப்போடப்பட்டதாக தெரிய வருகிறது. (து)

## மண்டபம் முகாம் சுற்றுடல் மீது பாதுகாப்பு ஏற்பாடு

(சென்னை)

இராமநாதபுரத்தில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து மண்டபத்திலுள்ள அகதி முகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் மண்டபம் முகாமிலுள்ள தீவிரவாதிகளின் நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவல் துறையின் நவீனரக துப்பாகிகளுடன் பணியாற்று

(5ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ். பிரதிநிதிகள் மட்டுநகர் விஜயம்

(மட்டக்களப்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் மட்டக்களப்பு நகருக்கு விஜயம் செய்தனர்.

இவ்விஜயத்தின்போது விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி பிரதித்தலைவர் திரு. கரிகாலனையும் ஏனைய பிரமுகர்களையும் அவர்கள் சந்தித்து உரையாடியதுடன் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டனர்.

கிழக்குப் பகுதியில் தற்பொழுது பூரண அமைதி நிலவுவதால் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிகள் தமது நிவாரணப்பணிகளை ஆரம்பிப்பது குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அண்டார்டி காவில் ஆராய்ச்சி: நச்சுவாயுவினால் பாதிக்கப்பட்டு நான்கு விஞ்ஞானிகள் மரணம்!

(லக்னே)

அண்டார்டிகா கண்டத்துக்கு ஆராச்சிக்குச் சென்ற இந்திய விஞ்ஞானிகள் குழுவில் நால்வர் காபன்மொனக்சைட்டு நச்சுவாயுவினால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இறந்தவர்களில் மூவர் விஞ்ஞானிகள், ஒருவர் பொறியியலாளர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தகவல் தருகையில், எழுபது பேர் கொண்ட இவ் ஆராய்ச்சிக்குழு இரவில் கூடாரங்களில் செயற்கையாக வெப்பம் ஏறபடுத்திக் கொள்ளவும், விளக்குகள் எடுக்கவும், மின்சாரம் விநியோகிக்கவும் ஜெனரேட்டர்களையே பயன்படுத்தி வந்தனர். இது எப்போதும் சமையல் செய்யும் அறையிலே இருக்கவேண்டுமென்பது விதி. அது இடம் மாறி தூங்கும் கூடாரத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது. இதனால் அவர்களுக்கு இம்மரணம் சம்பவித்தது. நிறம் மணம் இல்லாதது காபன்மொனக்சைட்டு எல்லாப் பக்கமும் மூடிவிட்டு குளிர்காயும் தீயை மூட்டிவிட்டு தூங்கியதால் இச்சாவு நிகழ்ந்ததாக இவ் ஆராய்ச்சிப் பொறுப்பாளர் தெரிவித்தார். (12)

## கூட்டுறவு சட்ட திருத்தம் ஆலோசனை வழங்க கோரிக்கை

(கொழும்பு)

கூட்டுறவுச் சட்டத் திருத்தம் பற்றி மறுபரிசீலனை செய்ய உத்தேசித்துள்ளது குறித்து பொதுமக்களிடமிருந்து கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூட்டுறவு இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. ரி. டி. ஜே. விசாரணை கோரியுள்ளார்.

இவ்வாலோசனைகளை இம்மாதம் 28-ம் திகதிக்கு முன்னர் செயலாளர் கூட்டுறவு இராஜாங்க அமைச்சு 330 யூனியன்பிளேஸ் கொழும்பு-2 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விவசாய உணவு கூட்டுறவு அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக்குழு கூட்டுறவு அங்கத்தவர்கள் தங்கள் சட்டங்களின் நிர்வாக முகாமைத்துவ பலமுடனும் அதிகாரத்துடனும் நடைமுறைப் படுத்தும் நோக்கத்துடனேயே இவ்வாலோசனைகள் கோரப் பட்டுள்ளன.

## அரச பதவிகட்கு போட்டிப் பரீட்சை மூலமே ஆட் சேர்ப்பு

(கொழும்பு)

"போட்டிப் பரீட்சைகள் நடாத்தி அதில் தெரிவானோரே அரசதுறைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவர் அடிப்படைத் தகைமைகள் சரியாக இருக்கின்றனவா என்பதைப் பரிசீலிக்கவே நேர்முகப்பரீட்சை நடைபெறும்."

இவ்வாறு பொது நிர்வாக ராஜாங்க அமைச்சர் சந்திரா பண்டார பாராளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

மூன்றும் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டமூல விவாதத்தின்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இளைஞர்கள் அமைதியின்மை பற்றிய ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் சிபார்சில் இதுவும் ஒன்றாகும். அரசதுறைக்கு ஆட்சேர்ப்பதில் திறமைக்கு முதலிடம் கொடுக்கப்படும். அத்துடன் பதவி உயர்வுகளுக்கும் போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டே உத்தியோகத்தர்கள் தெரிவாவர். (பூ)

## அரவம் தீண்டி மரணம்

[யாழ்ப்பாணம்]

பூநகரி வேராவில் பகுதியைச் சேர்ந்த நாகேந்திரன் ஸ்ரீதரன் என்பவர் காட்டுக்கு வேட்டைக்குச் சென்றபோது அரவம் தீண்டி மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். இவர் இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம 56)

## "ராஜீவ்காந்தியின் எதிர்காலத்தை காங்கிரஸ்தான் முடிவுசெய்யவேண்டும்" பி. பி. ஹிக்கு வி. பி. சிங் பேட்டி

(புதுடில்லி)

ராஜீவ்காந்தியின் எதிர்காலத்தை அவரது காங்கிரஸ் கட்சிதான் முடிவு செய்யவேண்டும் என்று இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. ஸி. வானொலிக்கு வழங்கியபேட்டியொன்றிலே அவர் இவ்வாறு கூறினார்.

இப்பேட்டியில் திரு. வி. பி. சிங் மேலும் கூறியதாவது:

ஊழலை ஒழிப்பதற்கு புதிய மசோதா சட்டமூலம் கொண்டுவந்துள்ளோம். இதன்படி எந்த உயர் தலைவர்மீதும் அது பிரதமராலும் சரி ஊழல் புகார் இருந்தால் கடுமையான விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள். காங்கிரஸ் அரசு மூன்று ஆண்டுகளில் சாதிக்கமுடியாதவற்றை நாம் மூன்று நாட்களில் செய்துவிட்டோம்.

இந்தியாவில் நல்ல பலமான எதிர்க்கட்சி இருப்பது அவசியம். பாரதீய ஜனதாவுடன் நாம் கூட்டணி அமைத்துள்ளோம். இதுவரை எனது அரசுக்கு ஆதரவு தொடர்கிறது. எனவே நெருக்கடி எதுவும் கொடுக்க விரும்பவில்லை. அக்கட்சி பொதுவான வேலைத்திட்டங்களில்எம்மோடு கருத்தொருமித்து செல்கிறது.

பாகிஸ்தான் பிரச்னை தொடர்பாக திரு. வி. பி. சிங்கிடம் கேட்டபோது: "இரு நாட்டு அரசாங்கமும் ஒன்று கூடி அமைத்த குழுக்களின் கூட்டங்களை திட்டமிட்டவாறு நடத்தி வருகின்றோம். இதற்கு மேலாக அரசட்டத்தையித்தில் பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று நான் விரும்பவில்லை" என்றார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனிதனுக்கு பொறுமையிருந்தால் வேறு பாது காப்புத் தேவையில்லை. கோபம் இருந்தால் வேறு பகைவர் தேவையில்லை. – பர்த்ருஹரிநீதி.

# நமது நோக்கு

## கரடியனாறு விவசாய ஆய்வு நிலையம்

வடகிழக்கு மாகாணத்தில் கிழக்குப் பகுதி மக்களின் வருமானம் விவசாயத்திலேயே பெருமளவு தங்கியுள்ளது.

அப்பகுதி மக்களின் வாழ்வும் தாழ்வும், விவசாய விளைபொருட்களின் விலையிலும் தங்கியுள்ளது.

குறைந்த முதலீட்டோடு கூடியளவு விளைச்சலைப் பெறும் விதத்தில் அவர்களது விவசாய முயற்சிகள் ஊக்குவிக்கப்படவேண்டும்.

நல்லின விதைகளைத் தெரிந்தெடுக்கவும், பாது காக்கவும் அவர்களுக்கு வழி காட்டவேண்டும்.

இதைவிட, மண்ணுக்கேற்ற வகையில், கிடைக்கும் வெப்ப தட்பநிலைகளுக்கேற்ற வகையில், புதிய இன விதைகளைக் கண்டு பிடித்து வழங்கவேண்டும்.

மண்ணின் வளத்தைக் காக்க, பயிருக்கேற்ற உர வகைகள் சிபார்சு செய்யப்படவேண்டும்.

பயிர்களைத் தாக்கும் நோய்களைக் கண்டறிந்து, அவற்றைக் கட்டுப்படுத்து வதோடு, பூரணமாக ஒழிப்பதற்கும் வழிகள் காணவேண்டும்.

இவற்றையெல்லாம் செய்வதற்கும் விவசாயக் கல்வியை அளிப்பதற்கும் கிழக்குமாகாணத்தின் கரடியனாறுப் பகுதியில் விவசாய ஆய்வுநிலையம் அமைந்திருந்தது

அப்பகுதிவிவசாயிகளுக்கு மாத்திரமல்லாது, ஏனைய பகுதி விவசாயிகளுக்கும் உதவக்கூடிய சில ஆய்வுகளும்நடைபெற்று வந்தன.

விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தைத் தந்து கொண்டிருந்தது மிளகாய்ச் செய்கை, மகாஇலுப்பள்ளாவில் அமைந்த புன்செய்கமநல ஆய்வ நிலையத்தில் MI-1, MI-2 ஆகிய இனங்கள் கண்டு பிடிக்கப்பட்டமை மிளகாய்ச் செய்கையாளருக்குப் பேருதவியாக இருந்தது.

மேலும் குறுகிய காலத்திற் கூடிய விளைச்சலைத் தரக்கூடிய புதிய மிளகாய் இனம் ஒன்றை ஆக்கும் ஆய்வில் கரடியனாறு விவசாய நிலையம் ஈடுபட்டிருந்தது.

அது என்னவாயிற்று? ஆய்வைத் தொடரமுடியவில்லை. வன்செயல்கள் காரணமாக அப்பாடசாலையே தொடர்ந்தும் இயங்க முடியவில்லை.

மேலைநாடுகளிலே, கோடிகளை முதலிட்டு, ஆய்வுகளை நடாத்தி. விளைச்சலைப் பெருக்குகிறார்கள். சர்வதேச சந்தையில் அவற்றை விற்றுப் பொருளாதாரத் துறையிலே முன்னணி வகிக்கிறார்கள், அதன் மூலம் அரசியற் பலம் பெறுகிறார்கள்.

இங்கே, இருக்கும் ஆய்வு நிலையங்களும் மூடப்பட வேண்டியதுர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது.

தொடக்கிய ஆய்வுகளையும் அரைகுறையான நிலையிற் கைவிடப்படவேண்டிய நிலை உருவாகியது

எமது சமுதாயம் சக்தி வாய்ந்த சமுதாயமாக மாறவேண்டுமாயின், பல முனைகளிலும் போர்க்கால அடிப்படையில் துரிதவளர்ச்சி காணவேண்டும்.

மண்ணைக் காப்பதோடல்லாமல், இருக்கும்மண்ணின் வளமும் காக்கப்படவேண்டும்!

அந்த வகையில், கரடியனாறு விவசாயஆய்வுநிலையம் பூரணமாகச் செயற்படவேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

## மேல் மாகாண சபைக்கு புதிய அமைச்சர் குழு

(தொழும்பு)

மேல் மாகாண சபையின் அமைச்சர் குழு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சர்குழு நேற்று ஆளுநர் திரு. எஸ். சர்வானந்தா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது.

புதிய அமைச்சர் குழு விபரம் வருமாறு:

மேல் மாகாண சபை முதலமைச்சர் திரு. சுசில் குமார முனசிங்க சட்டமும் ஒழுங்கும், நிதி, சுகாதாரம், உள்ளூராட்சி, சுற்றுலா என்பன வற்றுக்கான அமைச்சராகவும் இருப்பார்.

காணி, விவசாய கமநல சேவைகள், நீர்ப்பாசனம், கலாசார அமைச்சர் திரு. அல்மன்-பீரிஸ். கல்வி, இளைஞர் விவசாயம், மகளிர் விவகாரம், தொழில், வேலை வாய்ப்பு, விளையாட்டுத்துறை அமைச்சர் திரு சுரனிமல ராஜபக்ஸ- உணவுக் கூட்டுறவுத்துறை, சமூக சேவைகள், கைத்தொழில், கடற்றொழில் அமைச்சர் ஜனுப் அமீர் முகமட் யூசுப்– போக்குவரத்து, பொருளாதார, உள் அமைப்புக்கள், வர்த்தக, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் திரு. லோரன்ஸ் மெதிவல ஆகியோராவர்.

### ரூபவாஹினியில்
## ஸ்ரீசாரதாதேவி ஜெயந்திவிழா

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீசாரதாதேவி ஜெயந்தி விழாவின் சில பகுதிகள் ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவையில் இன்று மாலை 5-30 மணிக்கு ஒளிபரப்பாகும். (61)

## 75 பேருக்கு மூக்குக் கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் கண் சிகிச்சை முகாமில் எழுபத்தைந்து பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனைவிட யாழ்ப்பாண இரத்தவங்கி நல்லூர் லயன்ஸ் கழகம்

(12)

# இந்துமதம் பற்றி ரஷ்ய அறிஞர்கள் ஆராய்ச்சி

ரஷ்யாவில் நீண்ட நெடுங்காலமாக இந்திய மதங்களைப் பற்றி தெரிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளது. 1788 ஆம் ஆண்டு ரஷ்ய மொழியில் 'பகவத் கீதை' மொழிபெயர்க்கப்பட்டது. அது ரஷ்யக் கலாசாரத்தின் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது.

கிழக்கத்திய பிராமணர்களையும் அவர்களது சடங்குகளையும் நாட்டுப்புறப் பழக்க வழக்கங்களையும் பற்றிய பாரபட்சமற்ற ஆய்வு'' என்ற நூலை கெராசிம் லெபதேவ், 1825ஆம் ஆண்டில் வெளியிட்டார். அவர் (1785 - 1797) இந்தியாவில் 12 ஆண்டுகள் தங்கியிருந்து சேகரித்த தகவல்களின் அடிப்படையில் எழுதிய நூல் அது. இந்துமதத்தைப்பற்றி ரஷ்யர்கள் அறிந்து கொள்ள கடந்த நூற்றாண்டின் இறுதிவரை ரஷ்யாவில் கிடைத்துவந்த ஒரே நூல் இதுதான்.

சென்ற நூற்றாண்டின் எழுபதாம் ஆண்டுகளிலும் எண்பதாம் ஆண்டுகளிலும் மூன்று முறை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து, இந்தியாவின் பெரும்பான்மை மக்களின் மதம் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்ட ரஷ்யரான ஐ. பி. மினயேவ் இந்தியமதங்களைப்பற்றிய குறிப்புகளை வெளியிட்டார். அவர் பல சுவையான குறிப்புகளை எழுதியுள்ளார். இந்து மதத்தின் விசேட அம்சங்களையும் பல்வேறு இந்துமதப் பிரிவினரின் நடைமுறைகளையும் பற்றிய குறிப்புக்களே அவை. குருவின் பாத்திரத்தையும், மதுரா, வாரணசி போன்ற பாரம்பரியமான புனிதத் தலங்களையும் பற்றி அவர் எழுதியுள்ளார். அவரது நடையில் கவிதை எழிலும், இந்தியர்களின் மீது பரிவுணர்ச்சியும் நிறைந்திருப்பதைக்காணலாம்.

1894ஆம் ஆண்டு செர் கோவ்னி வெஸ்த்னிக் என்ற கிறிஸ்துவ சமய சஞ்சிகையில் முதல்முறையாக சுவாமி விவேகானந்தரின் பெயர் குறிப்பிடப்பட்டது.

ரஷ்ய திருச்சபையின் அதிகாரப்பூர்வமற்றபிரதிநிதியாக இளவரசர் சொக்கி வோல்கோன்ஸ்கி சென்ற நூற்றாண்டின் 90ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் நடைபெற்ற உலக மதங்களின் மாநாட்டில் கலந்துகொண்டார். அங்கே சுவாமி விவேகானந்தர் அறிமுகமானர். இருவரும் நண்பர்களாயினர். பல ஆண்டுகள் இருவரும் கடிதங்களைப் பரிமாறிக்கொண்டனர். இளவரசர் வோல்கோன்ஸ்கி மிகுந்த புலமை வாய்ந்தவர்: கீழ்த்திசை நாடுகளின் மதங்களின் மீது மிகுந்த நாட்டம்கொண்டிருந்தவர்: ரஷ்யாவில் விவேகானந்தரின் போதனைகளை ஊக்குவித்தவர்.

கடந்த நூற்றாண்டின் மத்தியில் ஐரோப்பிய அறிஞர்கள் ''ரிக்வேதத்தைப்'' படிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். ஐரோப்பா முழுவதும் இந்த ஆர்வம் பரவியிருந்தது எனலாம். மதம் உட்பட பண்டைய கால வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் 'ரிக் வேதம்' பிரதிபலித்தது எனப் பல அறிஞர்கள் கருதினர்.

மத நம்பிக்கைகளின் வளர்ச்சிப்போக்கை ஒருவர் புரிந்து கொள்வதற்கு, ரிக்வேதம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது ஐரோப்பியர்களுக்கு ரிக்வேதம படிக்கும் வாய்ப்பு கிட்டியது போலவே இந்தியர்களுக்கு பைபிள் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. சமஸ்கிருத மொழி பெயர்ப்பு 1819ஆம் ஆண்டில் வெளிவந்தது. பின்னர் சுமார் 40 இந்திய மொழிகளில் பைபிள் மொழிபெயர்க்கப்பட்டது. கிழக்கு மேற்கு நாடுகளின் தலைசிறந்த மத இலக்கியத்தை பரஸ்பரம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியதன் விளைவாக மத ஒப்பாராய்ச்சி தோன்றியது. கிறிஸ்துவத்துக்கும் கிறிஸ்துவமல்லாத பிறமதங்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றியும், மிகவும் புராதனமான கண்ணோட்டங்களிலிருந்து சிக்கலான மதக்கருத்துக்கள் தோன்றி வளர்ந்ததைப்பற்றியும் மக்களின் மத உணர்வு வளர்ச்சியடைந்ததைப் பற்றியும் ஆராய்ச்சி செய்யப்பட்டது. கீவ் நகர இறைமையியல் கழகத்தைச் சேர்ந்தவரும் கீவ் நகரிலுள்ள செயிண்ட் விளாதிமிர் பல்கலைக்கழகப் பேராசிரியருமான ஓரேஸ்த் நொவித்ஸ்கி எம். ஏ. 1860ஆம் ஆண்டில் தமது முக்கிய நூலான ''பண்டைக்காலத்தில் கீழ்த்திசை நாடுகளின் மதமும் தத்துவமும்'' என்ற நூலை வெளியிட்டார். ''தத்துவமும் மதமும் அடிப்படையில் பல பொது அம்சங்களைக் கொண்டுள்ளன'' என அதில் குறிப்பிட்டுள்ளார்.

'மதநம்பிக்கைகளைப் பற்றிய விளக்கமே தத்துவ ஞான வளர்ச்சிக்கும் பல்வேறு தத்துவ ஞானப் பிரிவுகளும் அமைப்புக்களும் தோன்றுவதற்கும் ஆரம்பமாக இருந்தது'' என்று ஓ. கிரிசான்ப் வி. என். ரெதிவ்த்சேவ் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர் ''கிறிஸ்துவத்துடன் தொடர்புடைய பண்டைய உலக மதங்கள்'' என்ற நூலை 1875 ஆம் ஆண்டில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் வெளியிட்டார். முதல் தடவையாக ரஷ்ய இந்தியவியல் துறையில் மேற்சொன்ன நூலாசிரியர்கள் தங்கள் படைப்புக்களின் மூலம் உலகிலுள்ள அனைத்து முக்கிய மதங்களைப் பற்றியும் ஒரு சர்வாம்சமான மதிப்பீடு செய்தனர், மதக் கோட்பாடுகளில் வேதங்கள், பிராமணீயம், மற்றும் இந்துமதம் ஆகியவற்றுக்கான இடங்களை நிர்ணயித்தனர். தங்களது நூல்களில் ரஷ்ய இறைமையியலாளர்கள், பண்டைய இந்தோ ஆரியர்களின் ஆரம்பகாலக் கருத்துகளின் படிப்படியான வளர்ச்சிப் போக்கையும், மத உணர்வு வடிவங்களின் உறுதியான மாற்றத்தையும் குறிப்பிட்டுள்ளனர். ஏராளமான தகவல்களின் அடிப்படையில் இந்து மதத்தின் வரலாற்று வேர்களையும் அந்த மதத்தின் தோற்றத்தி லும், அதன் வளர்ச்சிப்போக் கிலும் காணப்படும் தொடர்ச் சியையும் முன்னுக்குப்பின் முரணற்ற தன்மையையும் இனங்கண்டு கூறியுள்ளனர். ஓ. கிரிசானப் தமது நூலில் உலக சமய சித்தாந்தங்களில் இந்து மதத்துக்குள்ள இடம் என்ன என்பதையும் விவாதித்துள்ளார்.

இத்தகைய நூல்களிலிருந்து ரஷ்ய வாசகர்கள் இந்திய மதங்களின் அடிப்படையான கோட்பாடுகளைப் பற்றியும், பௌத்தம், ஜைனம் ஆகிய மதங்களோடு இந்து மதம் கொண்டுவந்துள்ள உறவு நிலையைப்பற்றியும், தலைசிறந்த மத இலக்கியங்களைப் பற்றியும் அறிந்துகொள்ள முடியும். ரஷ்ய அறிஞர்களால் விமர்சன ரீதியில் ஆராயப்பட்ட இந்த வரலாற்று தத்துவஞான விஷயங்கள் மிகுந்த மதிப்புடையவையாகும். அவை ரஷ்ய வாசகர்கள் இந்து

(5ம் பககம் பார்க்க)

## ஓ. மெசந்த்சேவா

## மக்கள் கருத்து

### பிரயாணிகள் பயனடைவர்

திருச்சி பலாலி விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டுமென டாக்டர் ஜனுர்த்தனன் இந்திய அரசை கோரியிருப்பது வரவேற்கவேண்டியதொன்றாகும். இச்சேவை முன்னர் இருந்த பொழுது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது, கிழக்கிலங்கையிலுள்ள மக்களும் பலாலி வந்து பிரயாணம் செய்ய முடிந்தது. தற்பொழுது இந்தியாவிற்கும், பிறநாடுகளுக்கும் செல்ல முடியாதவர்கள் கொழும்பிற்கு வந்து ஹோட்டல்களில் தங்கி பல சிரமங்கள் செலவுகள் உட்பட பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. ஆகையால் சம்பந்தப்பட்ட அரசுகள் இதனை கவனத்திற் கொண்டு இவ்விமான சேவையை செயற்படுத்த முன்வரவேண்டும். இதனாற் பிரயாணிகள் மிகவும் நன்மையடைவார்கள் என்பது திண்ணம். அத்துடன் முன்னர் மாவட்ட சபையினரால் ஆலோசிக்கப்பட்ட காங்கேசன்துறை,நாகபட்டணம் கப்பற் சேவையும் ஆரம்பித்தால் அதுவும் பிரயாணிகளின் துன்பத்தை குறைக்க உதவுவதாக அமையும்.

சி. சுந்தரம்.

கொடிகாமம்.

இரத்ததானம் ஒன்றையும் [illegible]

நல்லூர் லயன்ஸ் [illegible]

## பலதும் பத்தும்

### அவையா காட்டப்பட்டன?

இந்திய அமைதி காக்கும் படை யாழ் நகரைவிட்டு வெளியேறியது.

அந்த வேளை.....! தியேட்டர்களில் காட்டப்பட்ட சினிமாப் படங்களிற் சில எவை தெரியுமா?

''கொடி பறக்குது'' — ''ரேடல்'' (Raw Deal)

விற்பனையாளர்களுக்குப் பொதுசன மனோதத்துவம் (Mass Psychology) அவசியம் தேவை.

இதைப் படிக்க லட்சங்களைக் கொட்டி வெளிநாடுகளுக்கா செல்லவேண்டும்?

நம்மவர்களிடமே தாராளமாகப் படிக்கலாம் என்கிறார் விஷயம் புரிந்த ஓர் அன்பர்.

### கேள்வி - பதில்

கேள்வி: சங்கீதக்கச்சேரிகளில் சபையினர் 'சபாஸ்'! என்பதேன்?

பதில்: சொல்லிக் கூர்ந்து கவனியுங்கள். சுருதி சேர்ப்பதற்குரியசங்கேதஅட்சரங்கள் ச-ப-ச. அவை சேர்ந்துதான் 'சபாஸ்' வந்தது. சுருதி தவறுமலும் சிறப்பாகப்பாடுகிறார் என உற்சாகமூட்டுவதுதான் அது. சுருதி மாதா - லயம் பிதா.

வாணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 'பாராளுமன்ற தேர்தலில்

# இப்போதைக்கு நாங்கள் போட்டியிடமாட்டோம்'- அன்ரன் பாலசிங்கம்

**கேள்வி:-** தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி'யாக மாறியிருப்பதாகச் செய்திகள் அடிபடுகின்றன. இப்பெயர் மாற்றத்தின் பொருளென்ன என்று சொல்வீர்களா?

**பதில்:-** 'தமிழீழவிடுதலைப் புலிகள்' என்பது அரசியல் இராணுவ அமைப்பாகும். இராணுவப் பிரிவு - அரசியல் பிரிவு இரண்டும் இணைந்த ஓர் அமைப்பாக அது விளங்குகின்றது. எமது அரசியல் பிரிவு 1976-ம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்றது. ஆனால் அக்காலத்தில் அதுதலைமறைவு இயக்கமாகவே இருந்துவந்துள்ளது. இப்போதுதான் எமது அரசியல் பிரிவு முதல்தடவையாக ஓர் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இனி நாங்கள் அரசியல் கட்சியாக இயங்குவோம்.

**கேள்வி:-** பெயர் மாற்றத்தால் உங்கள்நோக்கம், இலட்சியம் அல்லது அரசியல் சித்தாந்தம் ஆகியவற்றில் ஏதேனும் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதா?

**பதில்:** எமது நோக்கில் - இலட்சியத்தில் - அடிப்படைச் சித்தாந்தத்தில் எந்தவிதமாற்றமும் இல்லை. புதிய கட்சியிலும் எல்லாம் அப்படியே உள்ளன. எமது கட்சி தமிழ்-முஸ்லிம்மக்களின் அரசியல், சமூக, தனி அரசை அமைக்கவோ, அந்தத் தேசியஇனத்துக்குள்ள உரிமையே சுயநிர்ணய உரிமையாகும். சர்வதேச சட்டங்களில் இணைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள ஓர்உலகக்கொள்கையாக சுயநிர்ணய உரிமை விளங்குகிறது.

சுயநிர்ணய உரிமை என்பது மணவிலக்கு உரிமை (விவாகரத்து) போன்றதே. இணைந்து அமைதியாக, அன்பாக வாழ முடியாத நிலைமை இருபகுதிக்கும் ஏற்படும்போதே மணவிலக்கு உரிமையை ஒருவர் பயன்படுத்தலாம்.

இதேபோன்றுதான் ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தை ஒடுக்குவது; எல்லை மீறிப்போகும்போது சுயநிர்ணய உரிமையை ஒருவர் பிரயோகிக்கலாம்.

**கேள்வி:-** அரசியல் யாப்பின் 6-வது திருத்தச் சட்டத்திற்கு அமைய ஆணை (விசுவாசப்பிரமாணம்) எடுப்பீர்களா?

**பதில்:-** எமது மக்கள் ஓர் அடிப்படை அரசியல் விருப்பினைத்தெரிவிப்பதற்கு அதாவது தங்கள் தலைவிதியை சுதந்திரமாக நிர்ணயிப்பதற்குத் தடையாக அமையும் 6வது திருத்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம். எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கும் நோக்குடனேயே 6வது திருத்தச் சட்டம் உருவாக்கப்படடுள்ளது. எனவே, 6வது திருத்தச் சட்டம் குறிப்பிடுவதுபோல விசுவாசப் பிரமாணம் செய்ய எம்மால் முடியாது. இந்த 6வது திருத்தச் சட்டத்தை ரத்துச்செய்யும்படி நாங்கள் சிறீலங்கா அரசைக் கேட்போம்; அப்போதுதான் எதுவிதத் தடையுமின்றித் தேர்தல் அரசியலுக்கு நாங்கள் வரமுடியும்.

**கேள்வி:** இன்றும் புலிகள் என்ற பெயரை உங்கள் கட்சியின் பெயரோடு சேர்த்திருக்கிறீர்களே; என்ன காரணம்?

**கேள்வி:** ஒரு ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் நீங்கள் வந்துவிட்டதாகக் கூறுகின்றீர்கள். அப்படியானால் ஒரு ஜனநாயகக் கட்சி எப்படித் தொடர்ந்து ஆயுதங்களை வைத்திருக்கமுடியும்?

**பதில்:** 17 ஆண்டுக் காலம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு தேசிய விடுதலை இயக்கமாக இயங்கிவந்தது என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்கவேண்டும். 15 ஆண்டுகள் சிறீலங்காப் படைகளுக்கு எதிராகக் கெரில்லாப் போரிலும், பின்பு 2 ஆண்டுகள் இந்தியப் படைகளுக்கு எதிராக நேரடிப் போரிலும் ஈடுபடவேண்டி இருந்தது. ஆயுதங்கர் தமிழ்-முஸ்லிம் மக்களின் பாதுகாப்போடு தொடர்புடையவையாக இருக்கின்றன. ஆகவே தமிழ்ப்பேசும மக்களுக்கு நிலையான பாதுகாப்பைத் தரும் ஒரு நிரந்தரத் தீர்வுதான் இந்த ஆயுதப் பிரச்னைக்கும் தீர்வாக அமையமுடியும்.

**கேள்வி:** தமிழ்ப் புலிகள் எவ்வளவு காலத்திற்குள் புதிய தேர்தல் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:** நிலைமை எவ்வளவு விரைவில் வழமைக்குத் திரும்புகிறது என்பதைப் பொறுத்தே அது அமையும். மக்களை ஒரு தேர்தலுக்கு ஆயத்தம் செய்யத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கால இடைவெளி தேவைப்படுகிறது. சிறீலங்கா படைகளுடன் 15 ஆண்டுகளும் பின்பு இந்தியப் படையுடன் 2 ஆண்டுகளும் விடுதலைப் புலிகள் போராடிக்கொண்டிருந்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள் நாங்கள் வெளியே வந்து மக்களிடையே தடைகள் ஏதுமின்றிக் கட்சி வேலை செய்யவேண்டியுள்ளது.

**கேள்வி:** இந்தியப் படை போன பின்பு ஓர் இரத்தக்களரி ஏற்படுமா?

**பதில்:** ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மாகாண சபையைப் பாதுகாக்கவே இந்தியப் படைகளால் தமிழ்த் தேசிய இராணுவம் அமைக்கப்பட்டது. கட்டாயமாகக் கடத்தப்பட்ட இளைஞர்களைக் கொண்டே இந்த இராணுவம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியப்படை நவீன ஆயுதங்களைப் பெருமளவில் தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு வழங்கியிருக்கிறது. தமிழ்த் தேசிய இராணுவத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே மோதல்கள நடைபெறுவது உண்மையே. இந்தியப் படை வெளியேறிய பகுதிகளில் தமிழ்த் தேசிய இராணுவத்தின் கைகளிலிருந்து ஆயுதங்களைக் களையும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். ஓர் இரத்தக்களரியைத் தவிர்க்கும் நோக்கோடு அவர்களை எங்களிடம் ஆயுதங்களை ஒப்படைத்து-சரணடையுமாறு நாங்கள் கேட்டுள்ளோம். இதுவரை தமிழ்த் தேசிய இராணுவத்தினர் 1000 பேர் எம்மிடம் சரணடைந்துள்ளனர். எதிர்த்து நிற்பவர்களை நாங்கள் மோதவேண்டி உள்ளது. தமிழ்-முஸ்லிம் பகுதிகளில் அமைதியையும், வழமை நிலைமையையும் கொண்டுவரும் பொருட்டு இந்த ஆயுதங்களைக் களையும் நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ளவேண்டி இருக்கிறது.

**கேள்வி;** பிரபாகரன் தமிழ்-முஸ்லிம் பகுதிகளில் அமைதியான வழமையான நிலைமை நாட்டில் நிலவவேண்டும் என்றா?

**பதில்:** இப்போதைக்கு நாங்கள் பாராளுமன்றத் தேர்தல்களில்போட்டியிடமாட்டோம் மாகாணசபைத் தேர்தல்களில் மட்டுமே நிற்போம். எந்தப் பதவிகளையும் தான் ஏற்கப் போவதில்லை. தன் இயக்கத்தைச் சேர்ந்தவர்களே இப்பதவிகளுக்குப் போட்டியிடுவார்கள் என்றும் பிரபாகரன் முன்பே கூறியிருக்கிறார்.

**கேள்வி:** தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான் என்பதை உங்களால் நிரூபிக்கமுடியுமா?

**பதில்:** இத்தீவிலுள்ள தமிழ் பேசும் மக்களின் ஏக பிரதிநிதிகள் நாங்கள்தான். கடந்த 17 ஆண்டுகளாக ஒரு தேசிய விடுதலை அமைப்பாகப் பெரும் மக்களின் ஆதரவுப் பின்னணியில் போராடிஞ்ளோம் என்பது உண்மை. இப்போது தேர்தலில் நின்று நாங்கள் தான் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை உலகத்துக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

**(விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வெளியீட்டுப் பிரிவு 'நீதியும் உண்மையுமே எமது நிலைப்பாடு' என்ற தலைப்பில் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் ரூபவாஹினிக்கும் அளித்த பேட்டியின் தொகுப்பை நூலாக வெளியிட்டுள்ளது. அவற்றில் இருந்து சில பகுதிகள்.)**

**(ஆ-ர்)**

## கேள்வி - பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத ஒரு பத்திரிகையாளர்

(கொழும்பு)

பிரபல பத்திரிகையாளரும், கதாசிரியரும், முன்னாள் ரூபவாஹினி அறிவிப்பாளருமான திரு. ரிச்சர்ட் டி சொய்ஸா அண்மையில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி பத்திரிகை உலகில் பெரும் தாக்கத்தையும் ஒருவித அச்ச உணர்வையும் ஏறபடுத்தியுள்ளது.

திரு. சொய்ஸாவை தெரியாதவர்கள் இலங்கையில் ஏன் வடக்கிலும் எவருமில்லை எனலாம். கடந்த ஒரு வருடத்திற்கு முன் ரூபவாஹினி இரவு 9 மணி ஆங்கிலச் செய்தியை திரு. சொய்ஸா வாசித்ததை பார்த்தவர்கள் செய்தி ஒளிபரப்பு முடியும்வரை தொலைக் காட்சிக்கு முன்னே அமர்ந்து விடுவர்.

வெள்ளி பிறேம் போட்ட மூக்குக்கண்ணுடியும், தாடியும் வைத்திருக்கும் சொய்ஸாவின் ஆங்கில உச்சரிப்பு மிக நேர்த்தியாகவும், கவர்ச்சியாகவுமிருக்கும். இவர் ஒரு பகுதிநேர ஆங்கில ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1987-ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின் சுதுமலையில் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் கலந்துகொண்ட கூட்டத்திற்கு ரூபவாஹினி சார்பில் வந்திருந்தார். அப்போது அங்கு திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தைக் கண்டு ஒரு தனிமனித சக்தி மக்களின் மனதை எவ்வளவு தூரம் கொள்ளை கொண்டுள்ளதென்பதை இன்று தான் நான் முதல்தடவையாக பார்க்கிறேன் என யாழ்ப்பாண பத்திரிகையாளர்களிடம் அவர் கூறியது எமது நினைவில் என்றும் அகலாது.

தாம் கொண்ட கொள்கைகளுக்காகவும் உண்மையின் எண்ணங்களுக்காகவும் மக்கள் மத்தியில் அவர்களின் நலன்களுக்காக உலவி வரும் பத்திரிகையாளர்களின் மறைவு சமுதாயத்திற்கும் அம்மக்களுக்கும் பெரும் இழப்பென்பதை எதிர்காலம் திரு. ரிச்சர்ட்டி சொய்ஸாவின் மரணம் மூலம் உணரும். (சி)

## கிராமங்கள் தோறும்

# புலிகளின்மக்கள்முன்னணி கிளைகள் திறக்க ஏற்பாடு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல கிராமங்களை தோறும் கட்சிக் கிளைஸ்தாபிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைவர் மாத்தையா என்றழைக்கப்படும் திரு. கோ. மகேந்திரராசா மட்டக்களப்பில் தங்கியிருந்து கிராம மட்டத்தில் தமது கட்சிக் கிளைகளை ஸ்தாபிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பிரமுகர்களையும் சந்தித்து தமது கட்சியின் நடவடிக்கைகள், எதிர்காலத் திட்டங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

கிராமசேவகர் பிரிவுகள் தோறும் கட்சிக் கிளைகள் திறக்கப்படவிருப்பதாகவும் கிராமமட்டத்தில் மக்கள் மத்தியில் தமதுகட்சி அதிக செல்வாக்கை பெற்றுள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

(121)

## மண்டப முகாம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்கள்.

அகதிகள் தங்கள் முகாமிலிருந்து காலையில் ஒரு மணி நேரமும் மாலையில் ஒரு மணி நேரமும் மட்டுமே வெயில் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

வேறு நேரங்களில் அகதிகள் வெளியில் செல்லவேண்டியிருந்தால் முகாமுக்கு பொறுப்பாகவுள்ள சப்கலெக்டரின் அனுமதி பெறவேண்டும்.

## இந்துமதம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மதத்தின் பிரதான கோட்பாடுகளை அறிந்து கொள்ள துணை செய்தன.

இந்திய மதம், தத்துவம், கலாசாரம் ஆகியவைபற்றித் தெரிந்துகொள்வதில் ரஷ்யர்களுக்கு இருந்த ஆர்வமானது 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்திய மத, தத்துவார்த்த கலாசாரத்தில் அவர்கள் பெரும் மதிப்பு வைத்திருந்ததையே இது எடுத்து காட்டியது. புரட்சிக்கு முந்திய காலகட்டத்திற்கே உரிய தடுமாற்ற உணர்ச்சியையும் எதிர்பார்ப்பு உணர்ச்சியையும் அது பிரதிபலித்தது. வாழ்க்கையில் ஆழமான மாறுதல் வரும் என்றநம்பிக்கையையும் வெளிப்படுத்தியது. அச்சமயம் பலர் இந்த நம்பிக்கை நிறைவேறுவதற்கு கிழக்கத்திய விவேகத்தையும் இந்திய தத்துவஞானிகளின் உதவியையும் எதிர்பார்த்தனர். அந்நாட்களில் ஆராய்ச்சி அறிஞர்களிடம் காணப்பட்ட ஆர்வமும் உத்வேகமும் இந்தியவியல் பற்றிய ஞானத்தை அதிகப்படுத்தியது. விவேகானந்தரின் இருபது கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன.

# சனிபகவானை மனமுருக வேண்டினால் அதுவே வாழ்வின் தெம்பாகும்

சனிபகவான் ஜாதகருக்குத் தீமையானவனாக இருந்தாலோ, கோசாரப்படி 1, 2, 4, 7, 8, 12 ஆகிய வீடுகளில் சஞ்சரித்தாலோ அவருக்குப் பரிகாரம் செய்தும் சனிக் கிழமை விரதம் இருந்து அவரைப் பூசித்தாலோ அவருடைய தீட்சணத்தை தணித்து தீமைகளை விலக்கச் செய்வதுடன் நன்மைகள் பலவற்றையும் அடையலாம்.

சனிபகவான் ஸ்தோத்திரப் பிரியர். பூஜை ஜெபம் மூலம் சனீஸ்வரபகவானைத் தியானிப்பது ஒருவகை சாந்தி பரிகாரம்.

சனிபகவானுக்குரிய திவ்ய ஷேத்திரங்களில் நீராடி தக்க தானதருமங்களை செய்வது ஒருவகை சத்ரு பரிகாரம்,

இவை இரண்டையும் செய்ய இயலாதவர்கள் தாம் இருக்கும் இடத்திலேயே உள்ள சனீஸ்வரபகவானை மனமுருகி வழிபட்டு தினசரி காக்கைக்கு அன்னமிட்டு எள்தீபம் ஏற்றி வருவது ஒருவகை சாந்தி பரிகாரம் ஆகும்.

### ஸ்தோத்திர பரிகாரம்

சனிபகவான் சூரிய புத்திரர் என்றும், சிவபூஜை செய்பவர் என்றும் புராணங்கள் கூறுகின்றன. எனவே தினசரி நியம நிஷ்டையும் சிவபூஜை செய்பவரையும் சனி அவ்வளவு பாதிப்பதில்லையென்கிறன புராணங்கள். அதனால் சிவபுராண பஞ்சாட்சர ஜெபம் செய்வது உத்தமம்.

கந்தசஷ்டி கவஸ பாராயணமும் சனிபகவானின் கோபத்தைத் தணிக்கும் கேடயமாகும்.

சனிபகவானின் இன்னல்களைக்களைய சனிபிரதோஷ விரதம், சோமபிரதோஷம், செவ்வாய் பிரதோஷம், குரு பிரதோஷ விரதங்கள் அனுஷ்டிப்பது நலம். பிரதோஷ விரத மிருப்பின் பிறவிப்பிணி அகலும், பிறப்பின் பயன் புலப்படும்.

### காராம்பசுவின் பால் அபிஷேகம்

சனிபகவான் கோசாரரீதியில் வரும் போது ஏற்படும் நோய்களுக்கு கறுப்புப்பசு அல்லது காராம்பசுவின்பாலை சிவபெருமானுக்கு அபிஷேகத்திற்கு வழங்கலாம். இதனை அவரவர் ஜென்ம நட்சத்திர தினத்தன்றுவரும் சனிக்கிழமையன்று அல்லது சனிப்பிரதோஷம், சோமபிரதோஷம் குரு பிரதோஷம் ஆகிய தினங்களில்வழங்கி வழிபடலாம்.

சனிபகவானை ஆராதிக்க இலகுவான தானங்கள் உண்டு.

தினசரி காக்கைக்கு அன்னமிடலாம்.

தினசரி ஏழைகளுக்கு அன்னமிடலாம்.

ஊனமானவர்களுக்கு முடிந்தளவு உதவுதல்.

கறுப்புக்கரை போட்ட வேட்டி அல்லது கறுப்பு வஸ்திரம் தானமாக வழங்குதல்.

தினசரி எள் எண்ணெயினால் சனிபகவானுக்கு தீபம் ஏற்றுதல்.

சனிக்கிழமைகளில் முக்கூட்டு எண்ணெயினால் சனிபகவானுக்குத் தீபமேற்றுதல்.

பழைய காலணிகளை ஒருவரும் தைக்கவும் கூடாது அதனை எவருக்கும் தானமாக வழங்கவும் கூடாது.

நல்லெண்ணெயை அக்கம் பக்கம் வீடுகளில் கடனாய் பெற்று தேய்த்து குளிக்கக் கூடாது. அது சனிக்கிழமைகளில் கண்டிப்பாக செய்யக் கூடாது.

சனி நீங்கும் காலத்தில் ஒரு இரும்புச் சட்டியில் நல்லெண்ணை ஊற்றி அதில் தன்முகத்தை பார்த்துவிட்டு அந்த இரும்புச் சட்டியினை தகுந்த தட்சணையுடன் தானமாக கொடுத்து கண்ணுடியை கண்ணால் பார்க்க வேண்டும்.

சர்க்கரைபொங்கல் வைத்து சூடாக தலைவாழை இலையில் போட்டு சற்று எள்ளுப் பொடியை தூவி ஒரு ஏழைக்கு கொடுக்க வேண்டும்.

சனிபகவானை ஜெப, தப, நியம நிஷ்டையுடன் ஆராதிக்கத் தேவையான ஸ்லோகங்களுண்டு. அவை சனிபகவானுக்குகந்த காயத்திரி மந்திரம். இதை 108 முறை ஜெபிக்க நவக்கிரக பீடை அகலும்.

''காகத் வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹே தந்நோ மந்தப் பிரஜோதயார்த்''

இதுதான் சனிபகவானுக்கான காயத்திரி மந்திரம்.

### சந்ததிக்கான சனிபகவான் துதி

சனீஸ்வர சாந்திக்கு தசரதர் ஒரு ஸ்தோத்திரம் பாடியுள்ளார். இதில் பதினறு சுலோகமுண்டு. இது சனிபகவானுக்கு உகந்த கவசமாகவுள்ளது. இதை சனிபகவான் காலத்தில் படிக்க சந்ததியுண்டாகும். சனிபகவான் வழிபாட்டுக்கு பல ஸ்தோத்திரமுள்ளது. அவற்றில் அஷ்டோத்திர சதநாமாவாளி, கோள்மாலை, ஸ்ரீஸுதர்ஸநஷ்டகம், என்பன பல.

## - ஸச்ஹி -

இததகைய சனிபகவானை இருதயசுத்தியோடு தியானித்து பூஜித்து தக்க பரிகாரகடமையுடன் செய்துவந்தால் சனீஸ்வரன் சர்வமங்களம் தருவார். காகவாகனன் கழலடி வீழ்ந்தால் கவலைகள் சூரியனைக்கண்ட பனிபோல் அகலும்.

சனிபகவான் திருக்கணிதப்படி 21 - 03 - 90 ல் மாறினை

(7ம் பக்கம் பார்க்க)

## போசாக்கு உணவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர். லயன்ஸ் கழகம் தனது பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்குள்ள உணவை வழங்குமுகமாக இரண்டாயிரம் குழந்தைகளுக்கு சூப் பக்கெட்டுகளை வழங்கியுள்ளது. இப்பணி நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், பார்வதி வித்தியாலயம், கத்தோலிக்க பாடசாலையில் வைத்து விநியோகிக்கப்பட்டது. (12)

## நூல்கள் மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

கலை இலக்கியக் கழகத்தினர் 1989 ஆம் ஆண்டில் ஈழத்தில் பிரசுரமான நூல்களின் மதிப்பீட்டை நிகழ்த்தவுள்ளனர்.

நூல்கள், சஞ்சிகைகள் வெளியிட்டோர் அவற்றில் ஒவ்வொரு பிரதி மார்ச் 31-ம் திகதிக்கு முன்னர் மேற்படி கழகத்தினருக்கு அனுப்பி மதிப்பீட்டுக்கு உதவும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரதிகளை திருமதி கோகிலா மகேந்திரன் விழிசிட்டி, தெல்லிப்பழை என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்கப்படடுள்ளனர்.

### யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில்

# பமிலியன், சென். அன்ரனிஸ் சாம்பியன்களாகத் தெரிவு

(நமது விளையாட்டு நிருபர் தேவா)

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவின் அனுசரணையுடன் யாழ்ப்பாண விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வந்த விளையாட்டுப் போட்டிகளில் பமிலியன் விளையாட்டுக் கழகமும், பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன,

### வலைப் பந்தாட்டம்

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக சாம்பியன் பட்டத்தைப் பெற்றுவந்த வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழகம் இம்முறை பமிலியன் விளையாட்டுக் கழகத்திடம் ஒரு புள்ளி வித்தியாசத்தால் தோல்வியடைந்தது,

பமிலியன் கழகத்துக்கும். வைக்கிங்ஸ் கழகத்துக்கு மிடையில் நடைபெற்ற இறுதி யாட்டத்தில் பமிலியன் கழகம் 24-23 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றிபெற்று சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இப்போட்டிக்கு வடக்கு-கிழக்கு மாகாணசபையின் விளையாட்டுத்துறை அத்தியட்சகர் திரு எஸ் மரியதாஸ் பிரதம அதிதியாகவும், யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திரு. பி. ஏகாம்பரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

மேற்படி சாம்பியன் மோதலுக்கு திருமதி றூபசிங்கமும், செல்வி மல்லிகாவும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

### கரபந்தாட்டம்

பெண்கள் பிரிவில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், சென். ரோக் விளையாட்டுக் கழகமும் மோதிய கடும் போட்டியில் சென். அன்ரனிஸ் கழகம் வெற்றிபெற்று சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டிக்கு திரு பீலிக்ஸ் மத்தியட்சகராகக் கடமையாற்றினர்.

மேற்படி சாம்பியன் மோதலுக்கு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. பி. ஏகாம்பரம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

### ஆண்கள் பிரிவு

ஆண்கள் பிரிவில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டிகளில் இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும், குருநகர் விளையாட்டுக் கழகமும் மோதியதில் சென். அன்ரனிஸ் கழகம் வெற்றிபெற்று சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டது.

இச் சாம்பியன் மோதலுக்கு குருநகர் பங்குத்தந்தை இம்மனுவேல் அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஆண்கள் பிரிவில் நடைபெற்ற போட்டிகள் அனைத்துக்கும் திருவாளர்கள் எஸ். இராசரத்தினம், ரி.எம்.தேவராசா, எம். சம்பந்தர் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்கள்.

இப்போட்டிகள் அனைத்தையும் யாழ்ப்பாண விளையாட்டு உத்தியோகஸ்தர் திருமதி றூபசிங்கம் சிறப்பாக நடாத்தி முடித்தமை குறிப்பிடத்தக்கது. (வி)




24 - 2 - 1990

சனிக்கிழமை

சதுர்த்தசிமாலை4மணி14நிமி வரை; அவிட்டம் அதிகாலை 4 மணி வரை சித்த அமிர்த யோகம், இராகுகாலம் காலை 9 மணி 30நிமி. 10மணி 58நிமி. சுபகருமங்களுக்கு ஏற்றதல்ல.

மேடம்: மேலதிகாரிகள் பாராட்டு. சகோதரர் உதவி குடும்பகுதூகலம், பணவகை உற்சாகம்.

இடபம்: ஞான உணர்வு, கடித உறவு மனையாள் சிறப்பு பெரியோர் ஆசி,

மிதுனம்: காரியத்தடை, வீண்குழப்பம், மனவேதனை, தொழில் பாதிப்பு, ஆலயதரிசனம்.

கடகம்: பிரயாணக்கஸ்டம் பணச்செலவு குடும்பபிரிவு, மனவியால் துன்பம்.

சிங்கம்: குடும்ப ஒற்றுமை, புதிய பதவி, பெண்வழிநேசம் விருந்துபசாரம்,

கன்னி: காரிய தாமதம், பெரியோர் சந்திப்பு, வாகன சிறப்பு, பண்பானசெயல்.

துலாம்: கடும்போக்கு அநாதரவான நிலை, நண்பர்பகை, மனச்சஞ்சலம்.

விருச்சிகம்: உடல் நிலை பாதிப்பு, மக்களால் துன்பம். வீண்பயம், குடும்பப்பகை.

தனுசு: முதன்மைநிலை, பணவரவு, மனச்சிறப்பு உயர்வான சம்பவம்.

மகரம்: சிறிய ஆசைகள், பணச்செலவுதொழில் பாதிப்பு தந்தையுடன் முரண்பாடு.

கும்பம்; ஏமாற்றப் படுதல் தொழில்பாராட்டு, கடிதத் தொல்லை. திருமணமுயற்சி

மீனம்: ஆரோக்கியம், குடும்பசந்தோஷம் வீட்டில் மங்களகாரியம் புதிய பதவி.

## இடமாற்றம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு புனித சவேரியார் தேவாலயத்தில் கடந்த பல மாதங்களுக்கு மேலாக இறைபணி ஆற்றிவந்த அருள் திரு யூச்சின் பிரான்சிஸ் அடிகளார் நாவாந்துறை - ஆனைக்கோட்டைப் பங்கிற்கு கடந்த வாரம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவரது இடத்திற்கு அருள்திரு நீக்கிலஸ் குரூஸ் (அ. ம. தி.) அடிகளார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (101)

## பேச்சுப் போட்டி நடத்த ஏற்பாடு

(மட்டுவில்)

சிவராத்திரி விழாவை முன்னிட்டு சரசாலை நுணுவில் சிதம்பரவிநாயகர் ஆலய கூட்டுப்பிரார்த்தனை சபையும் சரசாலை இந்து இளைஞர் மன்றமும் இணைந்து மாணவர்களுக்கான சமயப் பேச்சுப்போட்டி ஒன்றினை நடாத்திபரிசில்களும் சான்றிதழ்களும் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மிகச்சிறந்த மூன்று இடங்களுக்குப் பரிசில்களும் ஏனையோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இதில் ஆரம்ப பிரிவு, கீழ் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு என நான்கு பிரிவுகளாக இப்போட்டிகள் நடைபெறும். சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மண்டபத்தில் இன்று மாலை 6 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (82)

## சாராய விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச வடிசாலை கூட்டுத்தாபனம் தனது உற்பத்தியான சகலவகை சாராயங்களுக்கும் விலையை அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு போத்தலுக்கு பத்து ரூபாவால் அதிகரிக்கப் பட்டுள்ளது.

இரட்டைவடி தென்னம் சாராயம், வி. எஸ். ஓ. யு., டி.டி.பி. என்பன விலையுயர்த்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் சகல சாராய வகைகளும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறது. (12)

## பேடன்பவல்தின சிந்தனை நாள் நிகழ்ச்சி

(வட்டுக்கோட்டை)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச்சங்கம் நடாத்தும் ''பேடன் பவல் தினம் சிந்தனை நாள்'' நிகழ்ச்சிகளை முன்னிட்டு வட்டுக்கோட்டைத் தொகுதிக்குரிய சாரணர், குருளைச் சாரணர் போட்டிகள் நாளை 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் மாவட்ட ஆணையாளர் திரு. தேவன் குலந்துரை மேற்கொண்டுள்ளார். [139]

### 'வைத்தியசாலை ஊழியர்

# கடமையை செய்வதற்கு தடையாகஇருக்கமாட்டோம்'

## - கஸ்ரோ

(மட்டக்களப்பு)

''தமிழீழம் கிடைக்கும் வரை விடுதலைப் புலிகளின் போராட்டம் தொடரும். இந்தியப்படை தமிழர் தாயகத்திலிருந்து வெளியேறிய பின்புதான் நாம் பூரணமான ஜனநாயக அரசியலில் கலந்து கொள்வோம்''.

இவ்வாறு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ கல்முனை டாக்டர்கள், ஊழியர்கள் ஆகியோருடன் நடாத்திய கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்: வைத்திய சாலை ஊழியர்கள் தமது கடமைகளை செய்வதற்கு நாம் ஒருபோதும் தடையாக இருக்க மாட்டோம்.

எமது கரங்களில் ஆயுதம் இருப்பது விடுதலைப் போராட்டத்திற்கே தவிர மக்களை அச்சுறுத்துவதற்காக அல்ல என்றார்.

டாக்டர்கள் ஊழியர்கள் ஆகியோர் தமது குறைபாடு

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டம் வழமைக்குத் திரும்பியது

[மன்னார்]

மன்னாரில் சட்டவிரோதச் செயல்களெல்லாம் தற்போது விடுதலைப் புலிகள் தடைசெய்துள்ளனர். சட்ட விரோதமாக கசிப்பு காய்ச்சுதல், அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்றல், டைனமற் வைத்து மீன்பிடித்தல்போன்ற செயல்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

இதேவேளை நகரிலும் சுற்றுப் புறங்களிலும் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளையும்விடுதலைப் புலிகளே கவனித்து வருகின்றனர்.

இங்கு அமைதியும் பாதுகாப்பும் நிலவுவதால் கடைகள் யாவும் இரவில் கூடிய நேரம் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெறுவதால் சனநடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

அரசாங்கத் திணைக்களங்களிலும் மற்றும் தனியார் நிறுவனங்களிலும் வாரத்தில் 5 நாட்களும் கருமமாற்றப்படுகின்றன. இதனால்புனர்வாழ்வு, புனர் அமைப்பு பணிகள் தடையின்றி நடைபெறுவதோடு அபிவிருத்தி வேலைகளான வீதியமைப்பு, மின்னிணைப்பு, குடிநீர் வழங்குதல் போன்றவேலைகளும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. [பூ]

# 'உள்ளூர் உற்பத்தியை பெருக்கவேண்டும்'

- கரிகாலன்

[மட்டக்களப்பு]

"எமதுபொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமானால் நமது நாட்டு உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப்பெருக்க வேண்டும். இதனால் நாம் யாருக்கும் அடிபணிய வேண்டிய நிலை ஏற்படமாட்டாது."

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உதவித் தலைவர் திரு. எஸ். கரிகாலன், கல்மடு அ. த. க. பாடசாலை அறுவடை விழாவில் கலந்து கொண்டு பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:-

எத்தனையோ முன்னணிப் பாடசாலைகள் சாதிக்காத சாதனையை இப் பின்தங்கிய பாடசாலை இன்றைய வைபவம்மூலம் நிலைநாட்டியுள்ளது. சிறந்த சமுதாயம் உருவாவதற்கு இப்பாடசாலை மற்றைய பாடசாலைகளுக்கு ஒரு வழிகாட்டியாக அமைகிறது. [பூ]

## அமைதிப்படை முகாமிட்டிருந்த கட்டிடங்களை புனரமைக்க

# நிதி ஒதுக்கீடு!

(திருமலை)

இந்திய அமைதி காக்கும் படை முகாமிட்டிருந்து வெளியேறிய பதினேழு அரசாங்கக் கட்டிடங்களை மீண்டும் உரிய திணைக்களங்கள் செயற்படுவதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதற்காக 40. 7 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு வடக்கு, கிழக்கு மாகாண புனர்வாழ்வு நெறிப்படுத்தற் குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயஉதவிப்பணிப்பாளர் பணிமனை, தெங்கு அபிவிருத்திச் சபை, பனைவளச் சேவை ஆணையாளர் பணிமனை கூட்டுறவு உதவி அபிவிருத்தி ஆணையாளர் பணிமனை, ஓட்டிசுட்டான் செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கட்டிடத் திணைக்களம், மிருகவைத்திய பணிமனை, பொலிஸ் நிலையம், இலங்கை வங்கி, மாவட்ட ஆணையாளர் அலுவலகம், நெல் சந்தைப்படுத்தும் சபை, கல்வித் திணைக்களம், மேலதிக மாவட்டஆணையாளர்(காணி) பணிமனை சுங்கத்திணைக்களம் ஆகிய கட்டிடங்களே இதன் மூலம் புனரமைக்கப்படும்.

## சுயதொழில்களுக்கு கடன் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள் நெதர்லாந்து நாட்டில் கிவோஸ் நிறுவனம் வழங்கிய தொண்ணூறு லட்ச ரூபாவை விவசாயம், மந்தை வளர்ப்பு, மீன்பிடி, சுயதொழில் முயற்சிகளுக்கு கடனாக வழங்கியுள்ளன.

இதனைவிட இருபத்தெட்டு லட்சம் ரூபாவை சங்க நிதியில் இருந்தும் வழங்கியுள்ளன.

இக்கடன் சுழற்சி முறையில் வழங்க படுவதால் சங்க உறுப்பினர்கள் பெரிதும் நன்மையடைந்துவருவதாக யாழ் மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர் திரு. ரி. நந்தகுமார் 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்தார்

இதனைவிட உலகவங்கியின் நிதியைக்கொண்டு திட்டமிடல் பகுதியால் அரசசாரத நிறுவனங்களால் வழங்கப்படும் சுயதொழில் முயற்சிக்கான கடன் திட்டமும் விரைவில் நடைமுறைப்படுப் படவுள்ளது. இத்திட்டம் சங்கத்தின் நாலுற்றியாறு கிளைகளால் அமுல்படுத்தப் படவிள்ளது. (12)

## கல்முனையில்

# ஆயுதக் கொள்ளையரை இனம் கண்டுள்ளோம்

- புலிகள்

(மட்டக்களப்பு)

"கல்முனைப் பகுதியில் நவீன ஆயுதங்களுடன் நடமாடும் கும்பல் ஒன்று கொள்ளைகளில் ஈடுபட்டு வருவது எம்மால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் விடுதலைப்புலிகள் அணியும் சீருடைகளைப்போன்று உடைகள் அணிந்து கொள்ளைகளில் ஈடுபடுவதால் விடுதலைப்புலிகள் பற்றிய தவறான அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்த முனைகின்றனர். இவர்களை நாம் இனங் கண்டுள்ளோம்."

மேற்கண்டவாறு தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. எஸ். கரிகாலன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இத்தகைய குழுக்கள்மீது நாம் நடவடிக்கைகள் மேற்கொண்டால் ஒரு சமூக கலவரத்தைத் தூண்டி அரசியல் லாபம் தேடலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

இவர்களது சுயரூபம் விரைவில் வெளிப்படுத்தப்பட்டு மக்கள் உண்மை நிலை உணர்ந்துள்ளனர்.

சீருடையில் ஆயுதம் தரித்து மக்களைப் பாதுகாக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் விடுதலைப்புலிகள் என்பதை மக்கள் நன்கு புரிந்துகொண்டிருக்கிறார்கள். எனவே இத்தகைய நபர்களுக்கு மகக்கள் விரைவில் தகுந்த பாடம் புகட்டுவர். [க]

## சனி பகவானே

(6ம் பக்கத் தொடர்ச்சி)

லும், இரகுநாதையர் படி தெண்ணூற்றியாராம் ஆண்டு ஜனவரியில் தான் மாற்றம் அடைகிறது

(முற்றும்)

## நல்லூர் லயன்ஸ் கழகம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் ஹோட்டல் ஞானம்ஸில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதமவிருந்தினராக 306 பி லயன்ஸ் கழகத் தலைவர் பிரேமச்சந்திர பத்திரான தம்பதிகள் கலந்து கொண்டனர். வைபவத்திற்கு நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செல்வி எஸ். சின்னப்பு தலைமை தாங்கினர்.

[12]

## பண்டத்தரிப்பு

# கொத்தணி உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

(பண்டத்தரிப்பு)

பண்டதரிப்பு கொத்தணிப்பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த உடற்பயிற்சிப்போட்டி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானததில் நடைபெற்றது.

கொத்தணி அதிபரும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபருமான திருமதி தே. தம்பிராஜா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் வெற்றியீட்டியவர்கள் விபரம் பின்வருமாறு:

13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு ஜசந்தா றோ. க. வித்தியாலயமும் பெற்றன. 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு ஜசந்தா றோ. க. வித்தியாலயமும் பெற்றன. 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க. வித்தியாலயமும், மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியும் பெற்றன.

19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க. வித்தியாலயமும், இரண்டாமிடத்தை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், மூன்றாமிடத்தை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயமும் பெற்றன.

# பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் (எண்பத்திமூன்று) வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு கணவனையிழந்த அறுபத்தொரு பெண்களுக்கு தையல் மெஷின்கள், சிறுவியாபாரம், கோழி வளர்ப்பு, நீரிறைக்கும் யந்திரங்கள், வண்டில்மாடுகள் ஆகியவற்றை வழங்கவுள்ளதாக இவ்வமைப்பின் பொருளாளர் திரு.சாம்.எஸ். சதாசிவம் தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியை நெதர்லாந்து நாட்டின் சமூக நிறுவனமான "நோவிப்" வழங்கியுள்ளது.

இவ்வுதவிகளை வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களை நிதியம்கோரி பரிசிலனை செய்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் முப்பத்தாறு தையல் மெஷின்கள் ஆறுபேருக்கு கோழி வளர்ப்பு நிதி, பத்துபேருக்கு சிறுவியாபாரமுயற்சிக்கு வசதி, ஏழு பேருக்கு நீரிறைக்கும் யந்திரங்கள், இருவருக்கு வண்டில் மாடுகள் வழங்கப்படவுள்ளன. (12)

## வைத்தியசாலை

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பிரச்னைகள் பற்றி கருத்துக்கள் தெரிவித்தனர். எனும் உரையாடல் சுமுகமான முறையில் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## "சுவாமிகள்

# அநாதை சிறுவர்களின் விடிவிற்காக உழைத்தார்"

(கிளிநொச்சி நிருபர்)

"சைவமும், தமிழும் தழைத்தோங்கவும், நலிவுற்ற மக்களின் நல்வாழ்வு கருதியும் பாடுபட்டுவரும் மகாதேவா ஆச்சிரம வாரிசு அருள்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகளின் பணி மகத்தானதாகும்."

இவ்வாறு ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரம வாரிசும், கிளிநொச்சி திருநெறிக் கழகத் தலைவருமான அருள்திரு. கணேசானந்த மகாதேவா சுவாமிகளின் வரவேற்பு விழாவுக்குத் தலைமைதாங்கி உரையாற்றுகையில் கிளிநொச்சி செயலக உதவி அரசாங்க அதிபரும், குருகுல இயக்குநர் சபைத் தலைவருமான திரு. துரைராசா கூறினர்.

கிளிநொச்சி கனகபுரத்தில் திருநெறிக் கழக ஏற்பாட்டில் இவ்விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. உதவி அரசாங்க அதிபர் திரு. துரைராசா மேலும் பேசுகையில்,

கடந்த பல ஆண்டுகளாக கிளிநொச்சி குருகுல வளர்ச்சிக்காக, குறிப்பாக அநாதைச் சிறுவர்கள் விடிவிற்காக கணேசானந்த மகாதேவசுவாமிகள்பாடுபட்டு வந்துள்ளார். சுவாமிகள் குருகுல நிர்வாகியாகவும் பணியாற்றியுள்ளார். கிளிநொச்சியில் பல சேவைத் திட்டங்களை முன்னெடுத்து நிறைவேற்றியும் உள்ளார் என்றார்.

திருநெறிக் கழக இணைச் செயலாளரும், சமூக சேவையாளருமான திரு. நாயகம் சிற்றம்பலம் பேசுகையில், உலக மதங்களில் இந்துமதம் சிறப்பானதாகும். இந்துமதத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பவர் அருள்திரு.கணேசானந்த மகாதேவா சுவாமிகளாவர் என்றார்.

டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி, ஆசிரியை திருமதி சோ.செல்வராணி, உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. ம. பத்மநாதன், திருநெறிக்கழக உபதலைவர் எஸ். இராமநாதன், சமூகசேவை அதிகாரி பொன். நித்தியானந்தன், பிரசைகள் குழுத் தலைவர் எஸ்.சிவராசலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்கள். (83)

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) சத்யராஜ் ★ கௌதமி ★ கவுண்டமணி
"வாழ்க்கைச் சக்கரம்"

(2) நாகர்ஜூன் ★ ரகுவரன் ★ அமலா
"உதயம்"

(3) ஜெமினி ★ தேவிகா ★ M. R. ராதா
"இதயத்தில் நீ"
(ஒறிஜினல்)

(4) The Iron Triangle
(War)

(5) Robocop

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(21-567)

ஹவுஸ் புல் ! ! !

ஹரன் யாழ்.
10-30, 2-30, 4-30, 6-30
கமலஹாசன்
சரண்யா
நாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்துறை சிமெந்து

# கூட்டுத்தாபன தொழிலாளர் சம்பளத்தில் திடீர் குறைப்பு!

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை சீமந்து கூட்டித்தாபன தொழிலாளர்களின் சம்பளத்தில் திடீரென குறைப்பு செய்யப்பட்டமை தொழிலாளர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை உண்டு பண்ணியுள்ளது.

1988 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட சம்பள மாற்றத்தின் படி சீமெந்து கூட்டுத்தாபன தொழிலாளர்களுக்கும் சம்பள விகிதங்கள்உயர்த்தப்பட்டது. இந்த விகிதங்களின் படியே மேற்கண்ட திகதியில் இருந்து சம்பளம் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் இந்த மாதம் திடீரென சம்பளத்தில் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன் சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் இந்த சம்பளக் குறைப்பை ஆட்சேபித்து சீமெந்து கூட்டுத்தாபன முகாமையாளர், காங்கேசன் சீமெந்து ஆலை நிர்வாகத்தினர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்துள்ளதுடன் இது குறித்த பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டுள்ளது.

## திருக்கேதீஸ்வரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் ஆசிரியர் உட்பட 14 பேர் தனியார் பஸ் ஒன்றில் நேற்றுக்காலை திருக்கேதீஸ்வரத்திற்கு சென்று கொண்டிருக்கும்போது பஸ் கேரதீவை அண்மிக்கும்வேளை முடக்கொன்றில் திரும்புகையில் தடம்புரண்டு (வீதியை விட்டு விலகி மூன்று தடவைகள் புரண்டு) 15க்கு மேற்பட்கள்டவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் மினி பஸ் நடாத்துனர் ஐயாத்துரை இராசயோகன் (வயது 19) வசாவிவான், என்பவர் தலையில் காயத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான எந்த பஸ்வண்டிகளும் திருக்கேதீஸ்வரம் செல்லும் பாதையில் விபத்துக்குள்ளாகவில்லையென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (56)

## மோதல் முறைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தயா என அழைக்கப்படும் திரு. மகேந்திரராஜா, விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் 'யோகி' திரு. அன்ரன் பாலசிங்கம், திருமதி அடிலே பாலசிங்கம், திரு. சுரேஷ் ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்த குழுவில் இடம் பெற்றார்கள்.

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளில் உயர் கல்வி, விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் ஜனப் ஏ. சி. எஸ். ஹமீட், ஜெனரல் சேபால ஆட்டிகல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணத்துங்க, பொலிஸ் மா அதிபர் திரு. ஏர்னஸ்ட் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மூன்றரை மணித்தியாலங்களாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தின் போது, வடக்கு கிழக்குப பகுதிகளில் இன்று எதிர் நோக்கப்படும் பல்வேறு பிரச்னைகள் குறித்து ஜனாதிபதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க குழுவுடன் கலந்துரையாடினர்.

இலங்கையிலுள்ள சகல சமூகத்தவர்களும் சம உரிமைகளையும், சந்தர்ப்பங்களையும் பெற்று ஐக்கிய இலங்கையின் பொருளாதார சமூக முன்னேற்றத்தை வலுப்படுத்த வேண்டுமென்பதே தமது நோக்கமாகும என்று ஜனாதிபதி குழுவினரிடம் எடுத்துரைத்தார்.

சமாதானம் இனங்களுக் கிடையே அமைதி ஆகிய வற்றை தாம் விரும்புவதாகக் கூறிய ஜனாதிபதி மோதல் க்களையோ, தகராறுகளையோ தாம் ஆதரிப்பவர் அல்ல என்று சொன்னார்.

கடந்த பொதுத்தேர்தலின் போது வடக்கு கிழக்கு பிரச்னைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைப்பதற்கு மக்களிடமிருந்து தாம் ஆணையைப் பெற்றுக்கொண்டதாகவும் கூறினார்.

நாட்டின் ஸ்திரப்பாட்டையும் இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு. அதுவே தமது வழி காட்டு நெறி எனவும் தெரிவித்தார்.

மோதல் முறைக்குப் பதிலாக சமரச முறையைப் பின் பற்ற தாம் உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் மீண்டும் வலியுறுத்திக் கூறினர்.

இந்திய அமைதிப்படை வாபஸ் பெற்ற பகுதிகளில் அமைதியும் சகஜ நிலையும் ஏற்பட்டுள்ளதாக மாத்தயா தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கதுக்கு மாசு உண்டாக்கி அவர்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்கு திட்டமிட்ட முறையில் சில சக்திகள் செயல்பட்டு வருவதாக அவர் கூறினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் சேர்த்துக்கொள்ள எடுத்த தீர்மானம் குறித்து சில சக்திகள் அதிருப்தி கொண்டிருப்பதாக மாத்தயா தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகளை விளக்கி மாத்தயா விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சார்பில் மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார்.

வடக்கு கிழக்குப்பகுதிகளில் அமைதி, சகஜநிலை, ஸ்திரப்பாடு ஆகியவற்றை ஏற்படுத்த ஜனாதிபதி விசுவாசமாக முயற்சிகளை எடுத்து வருவதுகுறித்து தமது இயகத்தின் பாராட்டைத் தெரிவித்துக்கொண்ட அவர் இறுதி இடைசெயல்கள் [illegible] ஆதரவையும் தெரிவித்தார்.

## மண்டபம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது இம்முகாமில் தங்கியிருக்கும் அகதிகளுக்கான உதவித்தொகை கூட்டப்பட்டு, வரும் மாதம் 1-ம் திகதியிலிருந்து வழங்கப்படும் எனவும் அவர் கூறினர். (பூ)

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து இதுவரையுள்ளகாலத்தில் நடந்த உயர்மட்டப் பேச்சு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியப் படைகள் வெளியேற்றம் அடுத்தமாதம் நிறைவடையும் இவ்வாறு பீ.பீ.சி. தெரிவித்தது.

## யாழ். காப்புறுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாண பிராந்திய காப்புறுதிக் கூட்டுத்தாபன பதில் முகாமையாளர் ''ஈழநாடு''வுக்கு தெரிவித்துள்ளார்.

காப்புறுதிக் கூட்டுத்தாபன சிவில் நிர்வாகத்தடை நீக்கப்பட்டதால் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் பூரணமாக இயங்கவுள்ளது.

தற்போது காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அமுல் படுத்தியுள்ள பயங்கரவாத காப்புறுதித்திட்டம் யாழ்ப்பாணத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் சகல காப்புறுதித் திட்டங்களும் இங்கு செயல்படுத்தப்படுமென தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பிராந்திய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு இரண்டு காசாளர்கள், எட்டு எழுது வினைஞர்கள், இரண்டு சிற்றாழியர்கள் உடனடியாக தேவைப்படுகிறார்கள். இவர்களது சேவையை கூட்டுத்தாபனம் பெற்றதும் பூரணமான சேவை நடைபெறுமென்றார். இதுவரை காசோலை மூலமான பணம் செலுத்தல் முறையே நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. (12)

## சாவகச்சேரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மல்லிகா சாவகச்சேரி, 712 கா. பாமினி பெருங்குளம் கல்வயல், 225 எஸ். செல்லப்பாகச்சாய் தெற்கு, 127 எஸ். பத்மினிதேவி நாவற்குழி தெற்கு, 056 சந்திரவதனா நாவற்குழி, 1751 செ. ரஞ்சித தேவி வரணி வடக்கு, 1932 க. கணபதிப்பிள்ளை மீசாலை தெற்கு 315 எஸ். தனலட்சுமி உசன், 139 கே. சிவயோகம் சாவகச்சேரி தெற்கு, 1826 வ. பாமேஸ்வரி சரசாலை 1248 தேவதாசன் உதயகுமார் கோயிலாமனை கொடிகாமம், 421 எஸ். செல்வராஜா குடமியன் வரணி, 126 திருமதி எஸ். திலகவதி மந்துவில் கொடிகாமம், 1530 வி. சந்திரசேகரம் மீசாலை தெற்கு, 696 சி. விஜயபாரதி அல்லாரை வடக்கு, 041 ஆர். நாகேந்திரன் இயற்றாலை கொடிகாமம், 2172 ஞா. சிவபாலன் நுணுவில் கிழக்கு, 052 கி. சந்திரலீலா சரசாலை வடக்கு. 1086 நா. பிரேமலதா உசன், 2123 க. தர்மஞானேஸ்வரி வரணி, 130 எஸ். சந்திரராணி வரணி, விவசாயம்:

608 சு. கலாரஞ்சினி மட்டுவில் தெற்கு, 308 எஸ். எம். யோகநாயகி நுணுவில் கிழக்கு.

வர்த்தகம்:

097 எஸ். ஏ. ஸ்ரீஸ்காந்தா மந்துவில், 486 யோ. அருந்தவம் மீசாலை வடக்கு,

மனைப்பொருளியல்:

351 திருமதி ப. பரமேஸ்வரி நுணுவில் மேற்கு,

நெசவு:

212] அ, புஷ்பஞாளம், சரசாலை தெற்கு.

வாழ்க்கைத்திறன்;

653 பொ. இராசேந்திரா யட்டுவில் வடக்கு.

சங்கீதம்

1165 வி. சிவசெல்வி மிருசுவில்

278 எஸ். ஞானம்பிகை கரம்பைக்குறிச்சி வரணி, 1154 சி. குலவீரசிங்கம் மந்துவில், 279 எஸ். நாலாம்பிகை கரம்பைக்குறிச்சி வரணி. 680 ச. திலோத்துமி பெரியதாவடி சங்கத்தானை, 267 கே. செல்வகுமார் கொடிகாமம், 277 திருமதி வே. செல்வநாயகி கொடிகாமம்.

விஞ்ஞானம்:

915 நா. சணேசலிங்கம் மீசாலை தெற்கு சாவகச்சேரி, 159 எஸ் பாலகிருஷ்ணன் சங்கத்தானை, 182 வி கே. அன்பரசி சரசாலை சாவகச்சேரி, 963 நா. மகேந்திரன் சங்கத்தானை, 189 கே, சிவனேஸ்வரி மட்டுவில், 167 கி. கிருஷ்ணமூர்த்திஐயர் சாவகச்சேரி. சமூகக் கல்வி;

635 க. பத்மநிதி மட்டுவில் தெற்கு. 269 க. சந்திரதேவி, தவசிக்குளம் மிருசுவில், 214 க கோமதி நாவற்குழி கிழக்கு 767 வா. சிவஞானம் மீசாலை வடக்கு, 651 க, அருந்தவம் சரசாலை, 735 பொ. தங்கராசா மீசாலை வடக்கு, 219 பி. விஜயலக்சுமி கச்சாய் தெற்கு.

சிங்களம்:

1474 திருமதி இ. ஜெகதேவி நுணுவில் கிழக்கு, 1480 தமராணி கல்வயல்,

(மிகுதி நாளை வரும்)

## தொழில் நடாத்த அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் படவரைஞராக பயிற்சிபெற்றவர்களை யாழ். மாநகர சபை எல்லைக்குள் சொந்தமாக தொழில்நடாத்துவதற்கு அனுமதியளிக்கப்படுவர்.

இவர்கள் குறிப்பிட்ட காலம் தகுதிபெற்ற படவரையரிடம் பயிற்சிபெற்ற பின் அவர்கள் தாமாக மாநகர சபையில் பதிவுசெய்துகொள்ளலாமென அதிகாரிகள் தெரிவித்தனர். (12)

## மக்கள் வங்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்துடன் முன்னர் தொடர்பு கொண்ட போதெல்லாம் அது ஆங்கிலம், சிங்களத்திலேயே தொடர்பு கொண்டு வந்தது ஆனால் தற்போது மனமாற்றம் ஏற்பட்டு தமிழில் தொடர்பு கொள்வது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது. இதனால் வாடிக்கையாளர்களும் பெரும் பயனடையவுள்ளனர். (139)

## புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் தமிழ்முஸ்லிம் மக்களின் பிரச்னையை தீர்க்க விரும்புவதாகவும் ராணுவ அணுகுமுறையில் தமக்கு நம்பிக்கை இல்லையென்றும் அப்படியான சூழ்நிலை ஒருபோதும் ஏற்படாமல் தாம் பார்த்துக் கொள்வதாகவும் அவர் எமக்கு உறுதியளித்தார்.

இல்வாறு மாத்தயா தமது பேட்டியின் ஒருபகுதியில் தெரிவித்தார்.

## கடலில் முழ்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வராவார்.

பலாலியைச்சேர்ந்த மேற்படி குடும்பத்தினர் மண்டைதிவுப்பகுதியில் கடற்றொழில் செய்வதற்காக வாடி போட்டிருந்ததாகவும் சம்பவதினம் காலை மரணமானவருக்கு இருதடவை வலிப்பு நோய் காணப்பட்டதாகவும் நண்பகல் கடற்கரையில் நீரினுள் முகம் குப்புறப்படுத்திருப்பதைக் கண்டுதூக்கிப் பார்த்தபோது அவர் இறந்து காணப்பட்டதாகவும் இறந்தவரின் கணவன் தெரிவித்தார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணைக்காக ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கட்பட்டுள்ளது. (56)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

**திரு. V. K. சபாரத்தினம் (C. A. S.)**

(முன்னை நாள் தலைவர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி, யாழ்ப்பாணம்)

இவரின் மரணச் சடங்குகள் 25-2-1990 ஞாயிற்றுக் கிழமை இலண்டனில் நடைபெறும். அன்று காலை 8-00 மணிக்கு அவரது இல்லமான 51, பலாலி வீதி, கந்தர்மடத்தில் ஓர் பஜனை இடம்பெறும். தயவு செய்து எல்லோரையும் பங்குபற்றும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: திரு. V. S. S. K. சிவகுருநாதன்.
திருமதி விஜியலக்ஷ்மி கணேஷ்,
51, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(சி-3524)

## மரண அறிவித்தல்

### திருமதி விமலாதேவி தவரத்தினம்

கலட்டியைச் சேர்ந்த விமலாதேவி தவரத்தினம் காலமானார். அன்னார் இளைப்பாறிய மராமத்துப் பொறியியலாளர் (யா. மா. ச.) தவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ப. சி. அ. பொன்னுத்துரை கனகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற முத்துத்தம்பி, காலஞ்சென்ற சொர்ணம்மா தம்பதிகளின மருமகளும், தவராஜ், செல்வரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வகுமாரன், ரமணி ஆகியோரின் மாமியாரும், நிஷாந்தியின் பாட்டியும், பத்மினிதேவி, காலஞ்சென்ற மிருலாளினிதேவி, நித்தியானந்ததேவி ஆகியோரின சகோதரியும், மார்க்கண்டு, காலஞ்சென்ற பத்மநாதன். துரைரத்தினம் திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும், கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், வாகீஸ்வரன், பத்மேஸ்வரன். சிவதர்ஷினி, ஜெயதாரணி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 76, சேர் பொன் இராமநாதன் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 24-2-90 (இன்று) பி. ப. 4-00 மணிக்கு கோமபயன்மணல் மயாணத்தில் தகனஞ் செய்யப்படும்.

தகவல்: தவராஜ்
(சி 3526)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு மாசி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003068/81. Eelanadu P. O. Box No. 49. Telegram; Eelanadu Telephone: 2291,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org